27.11.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஒட்டன்சத்திரத்தில் கத்தரிக்காய் கிலோ ரூ.107

ஒட்டன்சத்திரம்,: ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் மழைக்கு முன் கிலோ ரூ.8க்கு விற்ற வெள்ளைக் கத்தரிக்காய் ரூ.107க்கும், பல மாதங்களாக ரூ.2 க்கு விற்ற சுரைக்காய் ரூ.17 க்கும் விற்றன.ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் மழை பெய்த பிறகு காய்கறி வரத்து குறைந்துள்ளது. இதனால் பல காய்களின் விலை இதுவரை கண்டிராத அளவில் உயர்ந்துள்ளது. மழை பெய்வதற்கு முன்பு ஒரு கிலோ வெள்ளை கத்தரிக்காய் ஒரு கிலோ ரூ.10க்கும் கீழ் விற்றது. மழையால் வரத்து குறைந்து விட்டது. நேற்று ஒரு கிலோ வெள்ளை கத்தரிக்காய் ரூ.107க்கு விற்றது. இதே போல் சுரைக்காய் விலை பல மாதங்களாக கிலோ ரூ.2 க்கு விற்றது. நேற்று இது ரூ.17க்கு விற்றது. இந்தவிலையானது இதுவரை கண்டிராத விலை என வியாபாரிகள் தெரிவித்தனர்.

### ஊட்டியில் துவங்கியது உறை பனிக்காலம்



ஊட்டி :ஊட்டியில், உறைபனி பொழியத் துவங்கியுள்ளது; குறைந்தபட்ச வெப்பநிலை, ஆறு டிகிரி செல்சியசாக குறைந்துள்ளது.நீலகிரியில், நவம்பர், டிசம்பர் மாதங்களில் பனிப்பொழிவு அதிகமாக இருக்கும். ஒரு வாரமாக பெய்த மழையால், பனிப்பொழிவு இல்லாத நிலை நீடித்தது. கடந்த இரு நாட்களாக மழை ஓய்ந்துள்ளதால், பனிப்பொழிவு துவங்கியுள்ளது. நேற்று, ஊட்டி மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட திறந்தவெளி மைதானம், தாவரவியல் பூங்கா, தலைக்குந்தா உள்ளிட்ட இடங்களில் உறைபனி விழுந்தது.ஊட்டியில், நேற்று குறைந்தபட்ச வெப்பநிலை, ஆறு டிகிரி செல்சியசாக குறைந்தது; பகலிலும், கடுங்குளிர் நிலவுகிறது.

## மீட்பு பணியில் படகுகள் சேதம்மீனவர்களுக்கு இழப்பீடு உண்டு

வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கையின் போது, மீனவர்களின் படகுகள் சேதமடைந்து உள்ளதால், அவற்றிற்கு இழப்பீடு வழங்க, தமிழக அரசு முடிவு செய்துள்ளது.சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில், ஒரு லட்சம் பேர் வெள்ளத்தில் சிக்கினர். தேசிய பேரிடர் மீட்புக்குழு, கடலோர காவல் படை, தீயணைப்பு படையினர் ஆகியோருடன், மீனவர்களும் மீட்பு பணியில் ஈடுபட்டனர். சென்னை, புறநகர் பகுதிகளில் வெள்ளத்தில் சிக்கியோரை மீட்கும் பணியில், 200க்கும் மேற்பட்ட படகுகள், ஒரு வாரம் ஈடுபட்டன. இதில், 1,000 மீனவர்கள் வரை பங்கேற்றனர். குறுகலான தெருக்களிலும், மீட்பு பணியில் ஈடுபட்டதால், 100க்கும் மேற்பட்ட படகுகள் சேதமடைந்தன. இதுகுறித்து, அகில இந்திய மீனவர் சங்க செய்தி தொடர்பாளர் நாஞ்சில் ரவி கூறுகையில், "வெள்ளத்தில் சிக்கியோரை மீட்கும் போது, எங்களின் படகுகள் அதிகளவில் சேதமடைந்து விட்டன; சீரமைக்க, அரசு இழப்பீடு தர வேண்டும்," என்றார்.மீன்வளத்துறை அதிகாரிகள் கூறுகையில், 'படகுகளை திரும்ப எடுத்து செல்வதற்கும், டீசலுக்கும், மீன்வளத் துறை உதவியது. மீனவர்களின் சேதமடைந்த படகுகளுக்கு இழப்பீடும், மீட்புப் பணியில் ஈடுபட்டோருக்கு சன்மானமும் வழங்கப்படும்; அரசு அனுமதி கிடைத்ததும், முறைப்படி அறிவிக்கப்படும்' என்றனர்.

## நேந்திரம் வாழைக்காய் விலை குறைவு 'சிப்ஸ்' தயாரிக்கும் பணி மும்முரம்



பழநி :நேந்திரம் வாழைக் காய் வரத்து அதிகரிப்பால் 'நேந்திரம் சிப்ஸ்' கடந்தாண்டை விட விலை குறைந்துள்ளது.பழநிகோயிலுக்கு சபரிமலைக்கு செல்லும் ஐயப்ப பக்தர்களின் வருகை அதிகரித்துள்ளது. பக்தர்கள் பஞ்சாமிர்தத்திற்கு அடுத்தப்படியாக நேந்திரம் வாழைக்காய்களில் தயார் செய்யப் படும் 'சிப்ஸ்' பாக்கெட் களை அதிகளவில் வாங்குகின்றனர். பழநி அடிவாரம், சண்முகநதி உள்ளிட்ட இடங்களில் நேந்திரம் 'சிப்ஸ்' தயாரிக்கும் பணி மும்முரமாக நடக்கிறது. கேரளா, மற்றும் அவினாசி, பல்லடம், மேட்டுப்பாளையம், வள்ளியூர் உள்ளிட்ட இடங்களிலிருந்து நேந்திரம் வாழைக்காய்கள் கொள்முதல் செய்து 'சிப்ஸ்' தயார் செய்கின்றனர். மழை பெய்து விளைச்சல் அதிகரிப்பால் கடந்தாண்டு கிலோ ரூ.40க்கு விற்ற வாழைக்காய், இவ்வாண்டு ரூ.21 முதல் ரூ.25க்கு கிடைக்கிறது. இதனால் 'சிப்ஸ்' விலையும் குறைந்துள்ளது. விற்பனை அதிகரிக்கும் என வியாபாரிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.சிப்ஸ் தயாரிப்பாளர் முருகன் கூறுகையில், “இவ்வாண்டு வாழைக்காய் வரத்துள்ளதால் நேந்திரம் சிப்ஸ் தயாரிப்பு அதிகரித்துள்ளது. ஒரு டன் வாழைக்காய்களில் 720 கிலோ சிப்ஸ் தயாரிக்கலாம். கடந்தாண்டு கிலோ ரூ.170வரை விற்றது. இவ்வாண்டு ரூ.150க்கு விற்கிறோம். சந்தை விலை குறைந்தால் 'சிப்ஸ்' விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது ,” என்றார்.

## 68 அடியாக உயர்ந்தது நீர்மட்டம் வைகை அணை திறப்பு எப்போது

தேனி:வைகை அணை நீர் மட்டம் 68 அடியாக உயர்ந்துள்ளதால், 1.70 லட்சம் ஏக்கர் விளை நிலம் பயன்பெற ஒரு போக சாகுபடிக்கு தண்ணீர் திறக்கும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.தேனி மாவட்டத்தில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழையால், வைகை அணையின் நீர்மட்டம் நேற்று மதியம் 3 மணி நிலவரப்படி 67.96 அடியை எட்டியுள்ளது. மாவட்டத்தில் மழை குறைந்ததால், நேற்று காலையில் வினாடிக்கு 1,931 கனஅடியாக இருந்த நீர் வரத்து, மாலையில் 1,100 ஆக குறைந்தது. குடிநீருக்கு 60 கன அடிநீர் திறக்கப்பட்டுள்ளது. ஆனாலும், அணையின் நீர்மட்டம் இன்று காலை 68 அடியை எட்டிவிடும். அணையில் தற்போது 5,261 மில்லியன் கன அடி நீர் உள்ளது.மதுரை மாவட்டம், திருமங்கலம் பிரதான கால்வாயின் ஒருபோக பாசன நிலங்களான 1.25 லட்சம் ஏக்கரும், மதுரை வடக்கு தாலுகாவில் உள்ள 2 ம் போக நெல் சாகுபடியாகும் 45 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்களுமாக மொத்தம் 1.70 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில், அணையை திறக்க வேண்டும் என தேனி, மதுரை மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் பாண்டியன் மதுரை கலெக்டர், பெரியாறு-வைகை செயற்பொறியாளர் ஆகியோரிடம் மனு அளித்துள்ளனர்.அணையை திறப்பது குறித்து தேனி, மதுரை மாவட்ட நிர்வாகங்கள் தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளன. அரசு அனுமதி கிடைத்தவுடன் இரண்டொரு நாளில் தினமும் ஆயிரம் கனஅடிக்கு மேல் 120 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படும் என பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**திண்டுக்கல்லில் விளையும் 'ஆப்கான்'அத்திப்பழம்**



திண்டுக்கல்,: திண்டுக்கல்லில் ஆப்கானிஸ்தான் நாட்டின் அத்திப்பழம் விளைகிறது.தினமும் ஒரு அத்திப்பழம் சாப்பிட்டு வந்தால் நன்மைகள் ஏராளம்.

அத்திப்பழம் தமிழகத்தில் மட்டுமே அதிகமாக வளரக்கூடிய பழப்பயிரினம். இதற்கு வாரத்திற்கு ஒரு முறை நீர் ஊற்றினால் போதுமானது. மருத்துவ குணம் நிறைந்த அத்திப்பழம் உணவை விரைவில் ஜீரணிக்க செய்து, சுறுசுறுப்பை தரும். வைட்டமின் சத்துக்கள் நிறைந்தது. வயிறு, சீறுநீரக கோளாறுகளை நீக்கும். கல்லீரலை பலப்படுத்தும். ரத்த ஓட்டம் அதிகரிக்கும். விவசாயி மணிவேல் கூறியதாவது: ஆப்கானிஸ்தானில் இருந்து அத்திப்பழ (ஹைபிரிட்)கன்றை தமிழகத்திற்கு கொண்டு வந்து பயிரிட்டேன். எல்லா வகையான மண்பாங்கிலும் கால நிலைகளிலும் வறட்சியை தாங்கி வளரக்கூடியது. நிலத்தில் இட்டவுடன் 3 அல்லது 4 ஆண்டுகளில் காய்க்க துவங்கிவிடும். இதை பயிர் செய்வதன் மூலம் குறைந்த செலவில் அதிக லாபம் பெற முடியும், என்றார்.

**பாழான பயிர் குறித்த கணக்கெடுப்பு பணியில் சிக்கல்! மத்திய குழுவிடம் முழு தகவல் அளிக்கப்படுமா?**



கடலுார்: கடலுார் மாவட்டத்தில் பெய்த கனமழையால் தண்ணீரில் மூழ்கி பாழான பயிர்கள் கணக்கெடுப்புப் பணியில் தாமதம் ஏற்பட்டு வருகிறது. இதனால், இன்று பார்வையிடும் மத்தியக்குழுவிடம் முழுமையான தகவல்கள் அளிக்கப்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

கடலுார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த கன மழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு 60க்கும் மேற்பட்டோர் இறந்தனர். பலி எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. மக்கள் செய்வதறியாது

நிலைகுலைந்து போயுள்ளனர். மேலும், கடலூார், பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, சிதம்பரம், விருத்தாசலம் பகுதியில் பயிர் செய்யப்பட்டிருந்த சம்பா இள நடவு பயிர்கள் தண்ணீரில் மூழ்கி அழுகி பாதிக்கப்பட்டுள்ளன.

**விவசாயிகள் வேதனை**

பல்வேறு பகுதியில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர் 60 ஆயிரம் ஏக்கரும், வாழை 6,000 ஏக்கரும், மரவள்ளி 6,000 ஏக்கரும், கரும்பு 3,000 ஏக்கரும், பருத்தி 7,000 ஏக்கரும், உளுந்து 8,000 ஏக்கரும் பாதிக்கப்பட்டுள்ளன. நெற்பயிரைப் பொறுத்தவரை தண்ணீர் ஓடுவதால் தண்டு வீணாகி சோர்ந்து விட்டன. இதனால் ஏக்கர் ஒன்றுக்கு 7 முதல் 10 மூட்டை அளவுக்கு மகசூல் இழப்பீடு வரும். எனவே, அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் வேதனையுடன் வலியுறுத்தி வருகின்றனர்.

கணக்கெடுப்பு பணிக்காக வெளி மாவட்டத்தில் இருந்து 160 பேர் வருகை தந்துள்ளனர். இவர்கள் தனித்தனி குழுவாக பிரித்து கணக்கெடுப்பு பணியில் இறக்கி விடப்பட்டுள்ளனர். இவர்களோடு வருவாய்த்துறையைச் சேர்ந்த வி.ஏ.ஓ., மற்றும் அதிகாரிகள் கூட்டாக கணக்கெடுப்புப் பணியை செய்ய வேண்டும்.

வி.ஏ.ஓ., க்கள் பலரிடம் சரியான அடங்கல் குறிப்பு எழுதாமல் இருப்பதும், சில இடங்களில் புதிய வி.ஏ.ஓ.,க்கள் பொறுப்பெற்றுள்ளதால் அவர்களுக்கு அடங்கல் போன்றவை குறித்து தெளிவான விவரம் அளிக்கப்படுவதில்லை எனவும் கூறப்படுகிறது. குறிப்பாக குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி பகுதியில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஒட்டுமொத்தமாக கணக்கெடுப்பு பணி நடத்த வேண்டும் என வலியுறுத்துவதால் வி.ஏ.ஓ.,க்கள் செய்வதறியாது விழித்து வருகின்றனர்.

**அதிகாரி கிடுக்கிப்பிடி**

இதற்கிடையே, கடலூாரில் உள்ள வேளாண் அதிகாரி ஒருவர், முழுவதும் பயிர் பாதிக்கப்பட்டிருந்தால் மட்டுமே கணக்கெடுப்பு செய்ய வேண்டும். மேலோட்டமாக கணக்கெடுப்பு நடத்தி னால் அடுத்த அரசு பதவியேற்றால்

கணக்கெடுப்பு அதிகாரிகள் பணம் செலுத்த வேண்டி வரும் என மறைமுகமாக அதிகாரிகளை மிரட்டி வருவதாக கூறப்படுகிறது.

கனமழை பெய்து 2 வாரங்களைக் கடந்தும் இன்னும் பாழான பயிர்கள் கணக்கெடுப்பு பணி முடிந்தபாடில்லை. இந்நிலையில் வெள்ள சேதங்களைப் பார்வையிட மத்திய குழு இன்று (27ம் தேதி) வருகை தருகிறது. அவர்களிடம் எடுத்துக் கூறுவதற்காகவது கணக்கெடுப்பு பணி முடிக்கப்படுமா என கேள்வி எழுந்துள்ளது.

# உஷார்!

- நாளை முதல் தமிழகத்தில் மீண்டும் கனமழை...
- முன்னெச்சரிக்கை நடவடிக்கையை துவக்குமா அரசு?

| அவசர உதவிக்கு... அழையுங்கள்! | |
|---|---|
| மாநில பேரிடர் மையம் | 1070 |
| மாவட்ட பேரிடர் மையம் | 1077 |
| அவசர கால ஆம்புலன்ஸ் | 108 |
| மருத்துவ தகவல் சேவை | 104 |
| தீயணைப்பு துறை | 101 |
| பொது சுகாதார இயக்குனரக சேவை மையம் 044 – 2435 0496, 044 – 2433 4811 94443 40396 93614 82899 | |

**சென்னை:** 'வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள, காற்று அழுத்த தாழ்வு நிலை, குறைந்த காற்று அழுத்த தாழ்வு நிலையாக வலுவடைந்து உள்ளது.



எனவே, நாளை முதல், தமிழகத்தில் மீண்டும் கனமழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. கடந்த முறை போல் இல்லாமல், மழை வெள்ள பாதிப்பை உடனுக்குடன் சீர் செய்ய, முன்னெச்சரிக்கை நடவடிக்கையை அரசு முன்கூட்டியே துவங்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

**வானிலை ஆய்வு மையம், அறிக்கை:**

அந்தமான் தீவுக்கு தென் பகுதி மற்றும் அதன் சுற்றுப்பகுதியில் உருவான, காற்று மேலடுக்கு சுழற்சி, வங்கக் கடலின் தென் கிழக்கு மற்றும் அதன் சுற்றுப்பகுதியை நோக்கி நகர்ந்துள்ளது.இந்த காற்று மேல் அடுக்கு சுழற்சி, குறைந்த காற்று அழுத்தமாக, அடுத்த, 24 மணி நேரத்தில் வலுவடையும்; இதனால், நவ., 30 வரை மழை பெய்யும்.

**தேதி வாரியாக மழை:**

நவ., 27: தென் கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் பரவலாக மழை பெய்யும்28: கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் கனமழை பெய்யும்29: கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் மிக கனமழை பெய்யும்30: கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் கனமழை பெய்யும்.

சென்னையில், அடுத்த, 48 மணி நேரத்துக்கு வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; மழை அல்லது இடியுடன் கூடிய மழை, ஒரு சில இடங்களில் பெய்யும். சென்னையின் சுற்றுப் பகுதிகளில், ஏற்கனவே மழை பெய்யத்

துவங்கி விட்டது. நேற்று காலை, 8:30 மணி நிலவரப்படி, காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் - 7; மகாபலிபுரம் - 4; விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் - 5; செங்கல்பட்டு - 1 செ.மீ., மழை பதிவானது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

**தயார் நிலையில்...:**

மழை பாதிப்புகளை குறைக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து, மாநில பேரிடர் மைய அதிகாரிகள் கூறுகையில், 'கனமழை பெய்யும் என்பதால், மாவட்ட நிர்வாகங்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும். வருவாய் துறையுடன், பிற துறைகளும் இணைந்து, சீரமைப்பு பணிகளை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளன' என, பொதுவான தகவல்களை தெரிவித்தனர். பிற அரசு துறைகளால் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் வருமாறு:

**பொதுப்பணித்துறை :**

சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி பொதுப்பணித்துறை மண்டலங்களில், கண்காணிப்பு மையங்கள் அமைத்து, நீர் நிலைகள் பற்றிய தகவல்கள், உடனுக்குடன் அரசுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது

* முக்கியமான, 15 அணைகள் உட்பட, 89 அணைகளின் நீர் நிலவரத்தை, 24 மணி நேரமும் கண்காணிக்க, மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நீர் வளத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள, 13 ஆயிரம் ஏரிகளும் கண்காணிக்கப்படுகின்றன
* நீர் நிலைகளில் இருந்து உபரி நீரை வெளியேற்ற, மண்டல தலைமை பொறியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டால் சீர் செய்ய, ஒரு லட்சம் மணல் மூட்டைகள் தயார் நிலையில் உள்ளன

**சுகாதாரத்துறை**

* வெள்ள பாதிப்பு ஏற்படும் பகுதிகளில், சிகிச்சை அளிக்க, நடமாடும் மருத்துவ குழுக்கள் தயார் நிலையில் உள்ளன. மழை பாதிப்பு அதிகம் ஏற்படும் பகுதிகளுக்கு, பிற மாவட்டங்களில் இருந்தும் மருத்துவ குழுக்கள் அனுப்பப்படும்
* குடிநீரில், 'குளோரின்' அளவு பரிசோதனை நடக்கிறது

* டேங்கர் லாரிகள் மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**உபரி நீர்வெளியேற்றம்:**

சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழல், பூண்டி, சோழவரம் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகள் நிரம்பி வழிகின்றன. இவற்றின் மொத்த கொள்ளளவு, 11 டி.எம்.சி., எனப்படும், 30 ஆயிரத்து, 800 கோடி லிட்டர்; அதாவது, தலா, 12 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட, 2.53 கோடி லாரிகள் மூலம் சப்ளை செய்யும் அளவு. இந்த ஏரிகளில், தற்போது, 2.16 கோடி லாரிகள் மூலம் சப்ளை செய்யும் அளவுக்கு நீர் இருப்பு உள்ளது.அடுத்த, மூன்று நாட்களுக்கு, கனமழை பெய்யும் என, எச்சரிக்கப்பட்டு உள்ளதால், ஏரிகள் பாதுகாப்பு கருதி, உபரி நீரை வெளியேற்றும் பணிகள் தொடர்கின்றன. "அடையாறு, கூவம், ஒட்டேரி நல்லா கால்வாய், பக்கிங்காம் கால்வாய் மற்றும் கேப்டன் காட்டன் கால்வாய்களில் தண்ணீர் அதிகம் செல்கிறது. எனவே, பொதுமக்கள் இங்கு குளிக்கவும், ஆற்றின் கரையோரம் குழந்தைகள் செல்லவும் தடை விதிக்கப்பட்டு உள்ளது," என, சென்னை கலெக்டர் சுந்தரவல்லி தெரிவித்துள்ளார்.

## கொய்யா' வை தாக்கும் தேயிலை கொசு

திண்டுக்கல் :திண்டுக்கல்லில் கொய்யாவை தாக்கும் தேயிலை கொசுவால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.அமெரிக்காவை தாயகமாக கொண்டது கொய்யா. எல்லா வகையான மண்பாங்கிலும், வறட்சியை தாங்கி வளரக்கூடியது. தமிழகத்தில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. கொய்யாவை அதிகமாக தாக்குபவை தேயிலை கொசு மற்றும் பழத் துளைப்பான்களாகும்.

அறிகுறிகள்: தேயிலை கொசுவின் தாக்குதல் இருந்தால் பிஞ்சுகள் மற்றும் பழங்கள் உதிர்தல் அதிகமாக இருக்கும். பழம் துளைப்பான்புழுக்கள் பழங்களை துளைத்து விதைகளை உண்டு சேதம் விளைவிக்கும். இப்புழுவின் தாக்குதலினால் பழங்களின் தரம் குறைந்து விற்பனை பாதிப்புக்குள்ளாகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தடுக்கும் வழிகள்: வேளாண் துணை இயக்குநர் ராமநாதன்

கூறியதாவது:தாக்கப்பட்ட பழங்களை அப்புறப்படுத்தி விட வேண்டும். முந்திரி, திராட்சை, வேம்பு பயிர்களுக்கு அருகே பயிரிடுவதை தடுக்க வேண்டும். தேயிலை கொசு தாக்கிய இளம் காம்புகள், பூங்கொத்துகள், உதிர்ந்த பழங்கள் போன்றவற்றை சேகரித்து அழித்து விட வேண்டும். தேயிலை கொசு தாக்குதல் தென்பட்டவுடன் மாலத்தியான் 0.1 சதவிதம் அல்லது எண்டோசல்பான் 0.03 சதவிதம் மருந்தை கைத்தெளிப்பானில் மரத்தின் எல்லா பாகங்களிலும் படும்படி தெளிக்க வேண்டும். இதன் மூலம் உற்பத்தியை இரண்டு மடங்காக உயர்த்தி, அதிக லாபம் பெறலாம், என்றார்.

**பசுமை உற்பத்தியாளர் அமைப்பு ஏழு கிராம விவசாயிகள் பயன்**

பொள்ளாச்சி: பெரும்பதி கிராமத்தில் செயல்பட்ட உழவர் மன்றம், 'நபார்டு' உதவியால் 'பசுமை உற்பத்தியாளர் அமைப்பு' என, உயர்ந்துள்ளது.

பொள்ளாச்சி வடக்கு, பெரும்பதி கிராமத்தில், சிறு, குறு மற்றும் நடுத்தர விவசாயிகளின் ஒருங்கிணைப்பில், சில ஆண்டுகளுக்கு முன், 'உழவர் மன்றம்' துவங்கியது. மன்றத்தின் செயல்பாடுகள், விவசாயக் குழுக்களின் சேர்க்கையால், 'உழவர் கூட்டமைப்பு' ஆக உருவெடுத்தது.

மத்திய, மாநில அரசுகள் மற்றும் தென்னை வளர்ச்சி வாரியம் வழங்கிய சலுகைகள், புதிய தொழில்நுட்பங்கள், இடுபொருட்கள், பசுந்தாள் உரங்கள், இவற்றுக்கான மானியங்கள், விவசாயிகளுக்கு கிடைத்தன.

நடப்பாண்டு, கோவை மாவட்டத்தில், இரண்டு உழவர் கூட்டமைப்புகளின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது; அதில் ஒன்று, பெரும்பதி உழவர் கூட்டமைப்பு; தற்போது, 'பசுமை உழவர் உற்பத்தியாளர் அமைப்பு' ஆக உயர்ந்துள்ளது. இதன் துவக்க விழா, வாணவராயர் வேளாண் கல்லுாரி மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) சார்பில், பெரும்பதி கிராமத்தில், நேற்று நடந்தது. தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின், துணை பொதுமேலாளர் இனிகோ அருள்செல்வன், வாணவராயர் வேளாண் கல்வி நிறுவன இயக்குனர் கெம்புசெட்டி தலைமை வகித்தனர். தமிழக வேளாண் பொறியியல் துறை

உதவிபொறியாளர் விஜயகுமார், வாணவராயர் கல்வி நிறுவன உதவி பேராசிரியர் காளிதாஸ் உட்பட பலர் பங்கேற்றனர்.

அமைப்பின் தலைவராக, திருவேங்கடம், செயலாளராக ரத்தினசாமி, பொருளாளராக சிவகுமார், 10 இயக்குனர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அமைப்பில், பெரும்பதி, சொக்கனுார், முத்துக்கவுண்டனுார், குமிட்டிபதி, ஜமீன்காளியாபுரம், கக்கடவு, காணியாலாம்பாளையம் கிராம விவசாயிகள், 50க்கும் மேற்பட்டோர், உறுப்பினர்களாக உள்ளனர்.அமைப்பின் தலைவர் திருவேங்கடம் கூறுகையில், "வரும் மூன்று ஆண்டுகளுக்கு, அமைப்பின் விவசாய வளர்ச்சிக்கு, 10 லட்சம் நிதியுதவி கிடைக்கவுள்ளது. இதைக் கொண்டு, விவசாய விளைப்பொருட்களை மதிப்பு கூட்டும் பொருட்களாக மாற்றுதல், தாவர எண்ணெய், தக்காளி ஜாம் தயாரித்து விற்பனைக்கு அனுப்பி லாபம் ஈட்டும் பணிகளில் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. விவசாயிகளின் முன்னேற்றத்துக்கு மட்டுமின்றி, கிராம முன்னேற்றத்துக்கும் உதவும்," என்றார்.

### தென்னங்கீற்று ஏற்றுமதி 'சர்...!'

கிருஷ்ணகிரி :சென்னை உட்பட தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் கனமழை காரணமாக, குடிசை வீடுகள் சேதமானதால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து தென்னங்கீற்று ஏற்றுமதி அதிகரித்துள்ளது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தென்பெண்ணை ஆற்றுப் பகுதிகளில், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. இதிலிருந்து பழுத்து விழும், தென்னை ஓலைகளில் இருந்து, தென்னங்கீற்று முடைதல் முக்கிய குடிசை தொழிலாக உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முடையும் தென்னங்கீற்றுகள், பெரும்பாலும் சென்னை உட்பட கடலோர மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்நிலையில், 15 நாட்களுக்கும் மேல் சென்னை உட்பட கடலோர மாவட்டங்களில் பெய்து வரும் கனமழையால், ஆயிரக் கணக்கான குடிசை வீடுகள் சேதமடைந்துள்ளன. சேதமடைந்த வீடுகளை மீண்டும் கட்டுவதற்காக, தென்னங்கீற்று தேவை அதிகரித்துள்ளது. இதனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த இரண்டு மாதங்களாக முடைந்து வைக்கப்பட்ட தென்னங்கீற்றுகள், விற்பனைக்காக தற்போது அனுப்பப்பட்டு

வருகின்றன.

கடந்த மாதம், நான்கு முழம் அளவுள்ள, 22 கீற்றுகள் சேர்ந்த, ஒரு கட்டு, 50 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது இதே கட்டு, 60 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்த பகுதியில் இருந்து மட்டும், தினமும், 20 லாரிகளில் தென்னங்கீற்று, சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு வந்தது.தற்போது, தேவை அதிகரித்துள்ளதால், 150க்கும் மேற்பட்ட லாரிகளில் தென்னங்கீற்று அனுப்பப்பட்டு வருகிறது.

**கம்பம் பகுதியில் மொச்சை பயிர்களில் "வைரஸ்'தாக்குதல்:மகசூல் பாதிக்கும் என விவசாயிகள் வேதனை**

கம்பம்:கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள மானாவாரி காடுகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மொச்சை பயிரில் தொடர் மழை காரணமாக "வைரஸ்' தாக்குதல் காணப்படுகிறது. இதனால் கடுமையான மகசூல் பாதிக்கும் என விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

கம்பம் பள்ளத்தாக்கில் முல்லைப் பெரியாறு பாசனத்தால் ரோட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ள பகுதிகள் பொன் விளையும் பூமியாக மாறியது. ஆனால், கூடலூரில் ஆரம்பித்து கம்பம், புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி, கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம் வரை பெரியாறு பாசனம் இல்லாததால் விவசாயம் வானம் பார்த்த பூமியாக உள்ளன. சமீபத்தில் 18 ம் கால்வாய் பயன்பாட்டிற்கு வந்த போதும் உறுதி செய்யப்பட்ட பாசன வசதி கிடையாது.

இந்நிலையில், லோயர்கேம்ப் முதல் தேவாரம் வரை ஆயிரக்கணக்கான மானாவாரி காடுகளில் சோளம், கம்பு, மொச்சை, நிலக்கடலை, சூரியகாந்தி உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். இதில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படும் பரப்பளவு சமீபகாலமாக குறைந்து விட்டது. மொச்சை சாகுபடி கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து செய்யப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக தொடர்ந்து பெய்த மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த மொச்சை பயிரில் "வைரஸ்' தாக்குதல் ஏற்பட்டது. வெள்ளை ஈக்கள் செடியில் இருக்கும் பச்சையத்தை உறிஞ்சி விடுவதால் இலைகள் மஞ்சள் நிறமாக மாற்றி விட்டன. இதனால் மகசூல் கடுமையாக பாதிக்கும் என

தெரிகிறது. இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கும்படி கலெக்டர் வெங்கடாச்சலம் உத்தரவிட்டுள்ளார்.

அதைத்தொடர்ந்து கம்பம் உதவி இயக்குநர் அசோகன் தலைமையில்விவசாய அலுவலர்கள் குழு மானாவாரி காடுகளில் ஆய்வு நடத்தி ஆலோசனைகளை வழங்கியுள்ளது. இது குறித்து உதவி இயக்குநர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது :

கம்பம் பள்ளத்தாக்கில் தொடர்ந்து மொச்சை சாகுபடி செய்கின்றனர். முதலில், இதை தவிர்க்க வேண்டும். தற்போது மொச்சை பயிரில் தாக்கிஇருப்பது ஒரு நச்சுயிரி நோய். இந்நோயை வெள்ளை ஈக்கள் ஒரு செடியில் இருந்து மற்றொரு செடிக்கு பரப்பும். இந்த நோயை கட்டுப்படுத்த "இமிடாகுளோரிபாஸ்' ஒருலிட்டர் தண்ணீரில் 2 மில்லி கலந்து தெளிக்கலாம். களை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வரும் ஆண்டுகளில் மொச்சையை தவிர்த்து சுழற்சி முறையில் குதிரைவாளி, கம்பு, சாமை போன்ற சிறுதானிய பயிர்களை சாகுபடி செய்யலாம். அல்லது ஊடுபயிராக சோளம், கம்பு பயிரிடலாம். இவ்வாறு கூறியுள்ளார்.

### முழு விளைச்சலுக்கு முன்பு மரவள்ளி அறுவடை தீவிரம்

சின்னசேலம்: சின்னசேலம் பகுதியில் மரவள்ளி பயிர்செய்துள்ள விவசாயிகள் விளைச்சலுக்கு முன்பாக அறுவடை செய்து வருகின்றனர்.

சின்னசேலம் தாலுகா வீபயங்கரம், கூகையூர், குரால் <உள்ளிட்ட கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் மரவள்ளி பயிர் சாகுபடி செய்துள்ளனர். பத்து மாத பயிரான மரவள்ளி கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் சாகுபடி செய்யப்பட்டது. இவற்றை வரும் டிசம்பர், ஜனவரி மாதங்களில்தான், அறுவடை செய்யமுடியும்.

சின்னசேலம் பகுதிகளில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால், மரவள்ளி பயிர்கள் அழுகும் நிலை ஏற்பட்டது. மேலும் தொடர்ந்து கன மழை பெய்தால் மரவள்ளி முழுவதும் சேதமடைந்து வீணாகிவிடும்.

இதனால் மரவள்ளி பயிர்செய்துள்ள விவசாயிகள் முழுமையான விளைச்சலுக்கு முன்பாகவே, அறுவடை செய்து வருகின்றனர். இதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. மரவள்ளி விலை வீழ்ச்சியால் சோகத்தில்

உள்ள விவசாயிகளுக்கு, வேளாண்துறை சார்பில் மாற்று பயிர் செய்வதற்கு ஆலோசனை வழங்க வேண்டும்.

## மேல்மலையனூர் வட்டார பகுதியில் தட்டு நாற்றாங்கால் அமைக்கும் பணி

அவலூர்பேட்டை: இயந்திர நெல் நடவு சாகுபடிக்கு தட்டு நாற்றாங்கால் அமைக்கும் பணியினை வேளாண் அதிகாரி பார்வையிட்டார்.

மேல்மலையனூர் வட்டாரத்தில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்ய 800 எக்டர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. துறிஞ்சிப்பூண்டி , அண்ணமங்கலம் பகுதிகளில், இத்திட்டத்தின்படி நெல் நடவிற்கு தட்டு நாற்றாங்கால் அமைக்கும் பணிகள் நடக்கிறது. இப்பணிகளை வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி பார்வையிட்டார். பின்னர், அவர் கூறுகையில், இயந்திர நடவிற்கு ஒரு ஏக்கருக்கு 16 முதல் 18 கிலோ விதைகள் போதும். இதன் மூலம் 16 நாட்களில் நாற்றுகள் தயாராகி விடுகிறது. ஒரு எக்டருக்கு 3000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இயந்திர முறையில் 20 லிருந்து 30 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைக்கிறது. இந்த முறையில் விவசாயிகள் பயிரிட்டு பலனடைய வேண்டும் என கேட்டுக் கொண்டார். உதவி வேளாண் அலுவலர் சக்திவேல் மற்றும் விவசாயிகள் உடனிருந்தனர்.

## கோமுகி அணையில் உபரி நீர் வெளியேற்றும் அளவு குறைப்பு

கச்சிராயபாளையம்: கோமுகி அணைக்கு நீர் வரத்து குறைந்துள்ளதால் நீர் வெளியேற்றும் அளவு குறைக்கப்பட்டது.

கல்வராயன் மலை மற்றும் கச்சிராயபாளையம் பகுதியில், பெய்த கன மழை காரணமாக, கோமுகி அணையின் நீர் மட்டம் கிடுகிடுவென உயர்ந்து, முழு கொள்ளளவை எட்டியது. தொடர்ந்து இப்பகுதியில் பெய்த மழையின் காரணமாக கல்வராயன் மலையில் உற்பத்தியாகும் கல்படை, மல்லிகைபாடி, பொட்டியம் ஆகிய ஆறுகளின் வழியாக தொடர்ந்து நீர் வரத்து அதிகரித்தது.

இதனால் அணையின் பாதுகாப்பு கருதி 44 அடி உயரத்திற்கு மட்டும் நீர் இருப்பு வைத்து, உபரி நீர் வினாடிக்கு 5 ஆயிரம் கன அடி வீதம், ஆற்று மதகு வழியே வெளியேற்றப்பட்டது. படிப்படியாக மழை அளவு குறைந்துள்ளதால், அணைக்கு வரத்து நீரின் அளவு 500 கன அடியாக குறைந்தது.

இதனால் அணையின் முழு கொள்ளளவான 46 அடி உயரத்தில்(560 மில்லியன் கன அடி) தற்போது 43.5 உயரத்திற்கு (471 மில்லியன் கன அடி) மட்டும் நீர் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும், உபரி நீர் வெளி யேற்றும் அளவு குறைக்கப் பட்டடு, ஆற்று மதகின் வழியாக 500 கன அடி நீரும், புதிய பாசன கால்வாய் வழியாக 100 கன அடி நீரும் திறக்கப்பட்டது.

## மணிமுக்தா அணையில் தீவிர கண்காணிப்பு

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி மணிமுக்தா அணையில், ஊழியர்கள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்ததால், கள்ளக்குறிச்சி அடுத்த கல்வராயன்மலை பகுதியில் கன மழை பெய்தது. இப்பகுதியில் பெய்த மழை நீர் முழுவதும் கல்படை, பொட்டியம், மல்லிகைபாடி, மணி, முக்தா ஆகிய நதிகளின் வழியாக கோமுகி, மணிமுக்தா ஆகிய அணைகளுக்கு வந்து நிரம்பியது. கல்வராயன்மலையிலிருந்து நீர் வரத்து பெற்று, கோமுகி அணை முழுவதுமாக நிரம்பி வழிந்தது. இதையடுத்து, தற்போது பெய்த பலத்த மழை காரணமாக மணிமுக்தா அணை நிரம்பி வழிகிறது. மணிமுக்தா அணையின் மொத்த கொள்ளளவான 36 அடியில்(736 மில்லியன் கன அடி) 34 அடி உயரத்திற்கு(590 மில்லியன் கன அடி) மட்டுமே, நீர் இருப்பு வைக்க முடியும். அணைக்கு தொடர்ந்து நீர் வரத்து அதிகரித்ததால், அணையின் பாதுகாப்பு கருதி 33.50 அடிக்கு நீர் இருப்பு வைக்கப்பட்டு, வரத்து நீர் முழுவதும் ஒரு ஷட்டர் வழியாக வெளியேற்றப்பட்டு வருகின்றது.

தற்போது அணைக்கு நீர் வரத்து குறைந்துள்ளதால், கடந்த சில தினங்களுக்கு முன் 6,000 கன அடி வரை வெளியேற்றப்பட்டு வந்த நீர் அளவு, நேற்று முன்தினம் முதல் வினாடிக்கு 480 கன அடியாக குறைக்கப் பட்டது. தொடர்ந்து

இரு தினங்களுக்கு மழை வாய்ப்பு <உ_<ள்ளதாக வானிலை ஆய்வு மையம் தகவலைத் தொடர்ந்து, அணை ஊழியர்கள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 5 ஆண்டுகளுக்கு பின் மணிமுக்தா அணையிலிருந்து ஆறு வழியாக அதிகளவில் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால், சுற்று வட்டார பகுதியைச் சேர்ந்த ஏராளமான கிராம பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு, மாவட்ட நிர்வாகம் எச்சரித்துள்ளது.

**வடகிழக்கு பருவமழை தீவிரம் மக்காச்சோள பயிர்கள் சேதம்**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி பகுதியில் தொடர்ந்து பெய்த மழையில் மக்காச்சோள பயிர்கள் சேதமாகியது. கள்ளக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் கரும்பு உள்ளிட்ட பல்வேறு வகையான பயிர்களை சாகுபடி செய்துள்ளனர். கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்த வடகிழக்கு பருவமழையால், ஏராளமான விவசாய நிலங்களில் வெள்ளம் புகுந்தது. பருவ மழையின் தாக்கத்தால் கள்ளக்குறிச்சி அடுத்த சிறுவங்கூர், சோமண்டார்குடி, அகரக்கோட்டாலம், குதிரைச்சந்தல், நல்லாத்தூர், அகரகோட்டாலம் உள்ளிட்ட பகுதியில் சாகுபடி செய்யப்பட்டிருந்த மக்காச்சோளம் மற்றும் கரும்பு பயிர்கள் மிகுந்த சேதமடைந்தன.

**நிலவேம்பு கஷாயத்துடன் பொடியும் கொடுங்கள்: சிறப்பு முகாம்களுக்கு வரும் மக்கள் கோரிக்கை**

சேலம்: தமிழகத்தில், 1,061 இடங்களில் நேற்று முன்தினம் துவங்கிய நிலவேம்பு கஷாயம் சிறப்பு முகாம்களுக்கு, வரும் பொதுமக்கள், 'கஷாயத்துடன் பொடியும் கொடுங்கள்' என, அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.
தமிழகத்தில் பெய்து வரும் மழையால் ஏற்படும் காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோயை தடுக்கும் வகையில், நிலவேம்பு கஷாயம் வழங்கும் சிறப்பு முகாம், நேற்று முன்தினம், தமிழகம் முழுவதும், 1,061 இடங்களில் துவங்கியது. சேலம் மாவட்டத்தில், 160 மையங்களில் நிலவேம்பு கஷாயம் வழங்கப்படுகிறது. முதல் நாள் முகாமில், 12 ஆயிரத்து, 500 லிட்டர் கஷாயம், 2.5 லட்சம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதே அளவு நேற்றும் வழங்கப்பட்டது. காய்ச்சல், தொற்று நோய்களை தடுக்கும் வகையில் ஒன்பது வகையான மூலிகை கலந்த

நிலவேம்பு குடிநீர், உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, தொற்று நோய்களை தடுக்கிறது. முகாம்களில் பெரியவர்களுக்கு, 30 மி.லி., முதல், 50 மி.லி., வரையும், சிறியவர்களில் ஒன்று முதல், 12 வயது வரை உள்ளவர்களுக்கு, 10 மி.லி., நிலவேம்பு கஷாயம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. முகாம் நேற்று இரண்டாவது நாளாக தொடர்ந்தது. முகாமில் கலந்து கொண்டவர்கள், ' தங்களின் குடும்பத்தினர், உறவினர்களை முகாமுக்கு அழைத்து வரமுடியாததால், கஷாயத்தை தயார் செய்யும், நிலவேம்பு பொடிகளை வழங்குங்கள்' என, கஷாயம் வழங்கும் பணியில் ஈடுபட்ட ஊழியர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

இது குறித்து சித்த மருத்துவ பிரிவு டாக்டர் ஒருவர் கூறியதாவது: சிறப்பு முகாம்களில் நிலவேம்பு கஷாயத்தை மட்டுமே அரசு வழங்க அறிவுறுத்தி உள்ளது. நிலவேம்பு பொடிகள் தேவைப்படுபவர்கள், அந்தந்த மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் செயல்படும் சித்த மருத்துவ பிரிவுகக்கு சென்று நிலவேம்பு கஷாய பொடிகளை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். முகாம்களில் வழங்க இயலாது. முகாம் இன்னும் மூன்று நாட்கள் நடைபெற உள்ள நிலையில், பொதுமக்களின் கோரிக்கை குறித்து அரசின் பார்வைக்கு கொண்டு செல்வோம். அரசு முகாமின் கடைசி நாளில், நிலவேம்பு கஷாய தயாரிப்புக்கான பொடிகளை வழங்க உத்தரவு பிறப்பித்தால், அதற்கும் சித்த மருத்துவ பிரிவு தயாராகவே உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## கடலூாரில் கொட்டித் தீர்த்த கனமழை: முந்திரி பருப்பு விலை மீண்டும் கிடுகிடு

சேலம்: கடலூாரில் கொட்டித் தீர்த்த கனமழையால், முந்திரி தோட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், நேற்று மீண்டும், முந்திரி பருப்பு விலை குவிண்டாலுக்கு, 1,000 ரூபாய் உயர்ந்தது.

கடலூர் மாவட்டத்தில் நவ.,6ம் தேதி கொட்டத் துவங்கிய அடை மழை தொடர்ந்து, நான்கு நாள் பெய்ததால், விவசாய நிலங்கள், முந்திரி தோட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. முந்திரி விளைச்சலில் கடும் சரிவு ஏற்படும் என, தகவல் பரவியதை அடுத்து, முந்திரி பருப்பின் பதுக்கல் அதிகரித்துள்ளது. மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும் முந்திரியின் வரத்தில் கடும் சரிவு

ஏற்பட்டதால், நவ.,17ல், குவிண்டாலுக்கு 3,000 ரூபாய் உயர்வு ஏற்பட்டது. தொடர்ந்து, நேற்று குவிண்டாலுக்கு மேலும், 1,000 ரூபாய் உயர்வு ஏற்பட்டுள்ளது. கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் பண்டிகைகள் அணி வகுக்கும் நிலையில், முந்திரி பருப்பு தேவை அதிகரித்துள்ள நிலையில், வரத்து முற்றிலும் நின்று விட்டது. முந்திரி பருப்பின் விலை மேலும் உயர்வு ஏற்படும் என வியாபாரிகள் தெரிவித்தனர். நேற்று முன்தினம், முதல் ரகம் குவிண்டால், 68 ஆயிரத்து,200 ரூபாய்க்கு விற்றது, நேற்று 69 ஆயிரத்து,200 ரூபாய்க்கும், இரண்டாம் தரம், 61 ஆயிரத்து,800 ரூபாய்க்கு விற்றது, 62 ஆயிரத்து,800 ரூபாய்க்கும், மூன்றாம் தரம், 60 ஆயிரத்து,120 ரூபாய்க்கு விற்றது, 61 ஆயிரத்து,200 ரூபாய்க்கு விற்பனையானது.

சேலம், செவ்வாய்ப்பேட்டையை சேர்ந்த முந்திரி மொத்த வியாபாரி குமார் கூறியதாவது: கடலூரில் பெய்த கனமழையால், முந்திரி பருப்பின் வரத்து முற்றிலும் இல்லை. இதை தங்களுக்கு சாதகமாக பயன் படுத்திக் கொண்ட வியாபாரிகள், விலை உயர்வை தொடர்ந்து அரங்கேற்றி வருகின்றனர். பண்டிகைகள் அணி வகுத்து வருவதால், தேவையும் அதிகரித்துள்ளது. முந்திரி பருப்பின் விலையில் மேலும் உயர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**நிலவேம்பு கஷாயம் வழங்கல்**

நாமகிரிப்பேட்டை: மழை காலத்தில் பரவும் காய்ச்சலை தடுக்க, நிலவேம்பு கஷாயம் வழங்கும் முகாம் தொடங்கியது. நாமகிரிப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள சித்த மருத்துவமனை பிரிவில், சிறப்பு முகாம் தொடங்கியது. வட்டார மருத்துவ அலுவலர் தயாசங்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர். நேற்று தொடங்கிய முகாம், ஐந்து நாட்கள் தொடர்ந்து நடக்கும். நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள மற்ற 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 21 துணை சுகாதாரநிலையங்களில் முகாம் நடக்கவுள்ளது. முகாம் குறித்து சித்த மருத்துவ அலுவலர் பூங்கொடி கூறியதாவது: மழைக்கால காய்ச்சலை தடுக்க முன்னெச்சரிக்கையாக நிலவேம்பு கஷாயம் முகாம் நடத்தப்படுகிறது. 5

நாட்கள் நடக்கும் முகாமில், தினமும் இலவசமாக கஷாயம் வழங்கப்படும். மேலும், காய்ச்சல் உள்ளவர்கள் வீட்டில் தயார் செய்ய நிலவேம்பு கஷாய பொடியும் வழங்கியுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

**கடலோர மாவட்டங்களுக்கு செல்லும் கிருஷ்ணகிரி தென்னங்கீற்று**

கிருஷ்ணகிரி: சென்னை உள்பட தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் கன மழை காரணமாக, குடிசை வீடுகள் சேதமானதால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து தென்னங்கீற்று ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தென்பெண்ணை ஆற்று பகுதிகளில், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. இந்த மரங்களில் இருந்து பழுத்து விழும் தென்னை ஓலைகளில் இருந்து, தென்னங்கீற்று முடைதல் மாவட்டத்தில் முக்கிய குடிசை தொழிலாக உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முடையும் தென்னங்கீற்றுகள், பெரும்பாலும் சென்னை உட்பட கடலோர மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது. கடலோர மாவட்டங்களில் உள்ள குப்பங்களில், தென்னங்கீற்றால் ஆன குடிசை வீடுகள் அதிகம் இருக்கும். இவ்வாறு உள்ள குடிசை வீடுகள் புயல் மற்றும் மழை காலங்களில் சேதமடைகின்றன. சேதமடையும் குடிசை வீடுகளை திரும்பவும் கட்ட, தென்னங்கீற்று தேவையாக உள்ளது.

இந்நிலையில், கடந்த, 15 நாட்களுக்கும் மேல் சென்னை உட்பட கடலோர மாவட்டங்களில் பெய்து வரும் கன மழையால், ஆயிரக்கணக்கான குடிசை வீடுகள் சேதமடைந்துள்ளன. சேதமடைந்த வீடுகளை மீண்டும் கட்டுவதற்காக, தென்னங்கீற்று தேவை அதிகரித்துள்ளது. இதனால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், காவேரிப்பட்டணம், பென்னேஸ்வரமடம், நெடுங்கல், திம்மாபுரம், பேறுஅள்ளி, அகரம், மருதேரி, விளங்காமுடி, புங்கம்பட்டி, பாரூர், அரசம்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில், கடந்த இரண்டு மாதங்களாக முடைந்து வைக்கப்பட்ட தென்னங்கீற்றுகள் விற்பனைக்காக தற்போது அனுப்பப்பட்டு வருகிறது.

கடந்த மாதம், நான்கு முழம் அளவு கொண்ட, 22 கீற்று கொண்ட, ஒரு கட்டு, 50 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது இதே கட்டு, 60 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்த பகுதியில் இருந்து மட்டும், தினமும், 20 லோடு தென்னங்கீற்று, சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு வந்தது. தற்போது, தேவை அதிகரித்துள்ளதால், 150க்கும் மேற்பட்ட லாரிகளில் தென்னங்கீற்று அனுப்பப்பட்டு வருகிறது.

**நெல்லில் 3 புதிய ரகங்கள் அறிமுகம்**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் புதிதாக மூன்று நெல் ரகங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. வேளாண் பல்கலைக்கழகம் மூலம் அறிமுகப்படுத்தப்படும் நெல் ரகங்கள், முதல், 10 ஆண்டுகளுக்கு அரசு மூலம், விதை நெல், மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். புதிய ரகம் என்பதால், அதை பிரபலப்படுத்தவும், விவசாயிகளை ஊக்கப்படுத்தவும், மானியம் வழங்கப்படுகிறது. கடந்தாண்டில், கோவை ரகமான கோ-ஆர்-50 என்ற புதிய சன்ன ரகம், ஈரோடு மாவட்டத்தில் அறிமுகமானது. இது, 130 முதல், 135 நாள் பயிராகும். விதைப்பண்ணையில், 38.5 ஏக்கரில் தற்போது பயிர் செய்யப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக, விவசாயிகளிடம் வழங்கி, விதை நெல் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு கிலோ, 10 ரூபாய் மானியத்தில் வழங்கப்படும். இதேபோல, இந்தாண்டு, கோவை ரகமான கோ-ஆர்-51 என்ற குறுவைக்கு ஏற்ற, 110 முதல், 115 நாள் பயிர் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இப்பயிர், 23.5 ஏக்கரில் விதை உற்பத்தியில் உள்ளது. இதுவும், 10 ரூபாய் மானியத்தில் வழங்கப்படும். தவிர, ஆடுதுறை ரகமான, ஏ.டி.டி.,48 என்ற சம்பா பருவத்துக்கு ஏற்ற, நடுத்தர ரகம், 130 முதல், 135 நாள் விதை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்மூன்று ரகமும், அரசு விதைப்பண்ணையில் விதையாக உற்பத்தி செய்து பிரச்னைகள், நாட்கள், மகசூல் போன்றவை கணக்கிட்டு வினியோகம் துவங்கும். வழக்கமாக சான்று விதை உற்பத்தியின்போது, ஒரு ஹெக்டருக்கு, 5 டன் விதை கிடைக்கும். அச்சான்று விதையை விவசாயிகள் பெற்று, வயல்களில் நடவு செய்யும்போது, ?ஹக்டருக்கு சராசரியாக, 7.5 டன் மகசூல் கிடைக்கும். ஏ.டி.டி., 16 என்ற குண்டு ரக இட்லி அரிசிக்கு மாற்றாக, கோ-ஆர்-51 ரகம் அமையும் என

எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள மூன்று ரகமும், நோய் மற்றும் மருந்து எதிர்ப்பு சக்தி அதிகம் கொண்டவை என்றும் வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**அமராவதி அணைக்கு நீர் வரத்து குறைந்தது: வெள்ள அபாயம் நீங்கியது**

கரூர்: "அமராவதி அணைக்கு நீர்வரத்து குறைந்ததால், வெள்ள அபாயம் இல்லை," என, உதவி பொறியாளர் ராஜா கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம், பழநி பகுதியில் சில நாட்களுக்கு முன், மழை பெய்து வந்ததால், உப நதிகளில் இருந்து வரும் வெள்ள நீரும், அமராவதி ஆற்றில் வந்து கொண்டிருந்தது. திருப்பூர் மாவட்டம் உடுமலையில் அமராவதி அணையில் நீர் வரத்து அதிகரித்து, நேற்று முன்தினம் அணையின் மொத்த கொள்ளளவான, 90 அடியில், 84 அடியை தொட்ட நிலையில், அமராவதி கரையோர பகுதிகளுக்கு முதல்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது. இந்நிலையில், படிப்படியாக நீர்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால், நேற்று நீர்வரத்து, 1,500 கன அடியிலிருந்து, 1,080 கன அடியாக குறைந்தது. தற்போது அணையின் நீர்மட்டம், 85.5 அடியாக உள்ளது.

இது குறித்து, அமராவதி வடிநில கோட்ட உதவி பொறியாளர் ராஜா கூறியதாவது: பொதுவாக அணை, 85 அடியை தொடும் போது, முதல் கட்டமாக வெள்ள அபாய எச்சரிக்கை விடுவது வழக்கம். அதன்அடிப்படையில் நேற்று முன்தினம் எச்சரிக்கை விடப்பட்டது. நேற்று தண்ணீர் வரத்து குறைந்த நிலையில், தற்போது உள்ள நிலையில் நீர் வந்தால் கூட, அணையின் மட்டம், 88 அடியை தொடுவதற்கு மூன்று நாட்கள் ஆகும். அணையில் இருந்து ஆற்றில் தண்ணீர் திறந்து விட்டாலும், கரூர் மாவட்டத்திற்கு வந்து சேர, இரண்டு நாள் ஆகும். தற்போது ஆற்றில் தண்ணீர் இல்லாத நிலையில், அணைக்கு நீர்வரத்து, குறைத்து காணப்படுவதால் வெள்ளம் ஏற்பட வாய்ப்பில்லை. கடந்த ஆண்டு மழை பருவத்தின் போது அமராவதி அணை நிரம்பி உபரி நீரானது, 27 ஆயிரம் கன அடி திறக்கப்பட்டது. இது தவிர கிளை ஆறுகளில் இருந்து, 10 ஆயிரம் கன அடிநீர் உபரியாக வந்து ஆற்றில் கலந்தது. இதனால், 37ஆயிரம் கனஅடிநீர்

வந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அதுபோன்ற நிலைமை ஏற்பட இப்போதைக்கு வாய்ப்பு இல்லை. மேலும், தாராபுரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில், பெய்த கன மழையால், கரூர் அருகே உள்ள செட்டிபாளையம் தடுப்பணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இங்கு, 700 கன அடி நீர் வந்துகொண்டு இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## தடுப்பணையில் 4,000 கன அடி நீர் திறப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி

கரூர்: கரூர் மாவட்டம், மாயனூர் தடுப்பணையில் இருந்து, 4,000 கன அடி நீர் திறப்பால் நெல், வாழை, கரும்பு உள்ளிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம், குளித்தலை, லாலாபேட்டை பகுதியில் சம்பா சாகுபடி செய்தும், போதிய மழை இல்லாததால் பெரிதும் அவதிப்பட்டு வந்தனர். வயலுக்கு நீர் பாய்ச்ச முடியாமல் திண்டாடினர். இந்நிலையில், ஒரு மாதமாக தொடர்ந்து கனமழையும், லேசான மழையும் பெய்ததால், காவிரியில் அமைந்துள்ள மாயனூர் தடுப்பணையில் ஒன்றரை டி.எம்.சி., நீர் வரை தேக்க முடியும் என்றாலும், தற்போது ஒரு டி.எம்.சி., வரை தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது.

வாய்க்கால் நிரம்பி ஓடுகிறது: தொடர்ந்து தடுப்பணைக்கு, 4,000 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இதை அப்படியே திறந்து விடுகின்றனர். இதன் காரணமாக தென்கரை வாய்க்கால், கட்டளை வாய்க்கால் நிரம்பி தண்ணீர் ஓடுகிறது. விவசாயிகள் தங்கள் வயல்களுக்கு தேவையான தண்ணீரை பெற்று வருகின்றனர். இந்த தண்ணீரை நம்பி, 60 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் விவசாயிகள் நெல், கரும்பு, வாழை, வெற்றிலை போன்ற பயிர்களை விளைவித்து வருகின்றனர். அதேபோல், மானாவாரி பயிர் செய்வதிலும் ஆர்வம் காட்டுகின்றனர். நெல் அறுவடையில் தீவிரம்: தற்போது தண்ணீர் வாய்க்கால்களில் கரைபுரண்டு ஓடுவதால், விவசாயிகள் கடந்த ஒரு மாதமாக நெற்பயிருக்கு தண்ணீர் விட்டு அதைக் காப்பாற்றி தற்போது சம்பா நெல் அறுவடை பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர். லாலாபேட்டை,

மகிழிப்பட்டி, பஞ்சப்பட்டி போன்ற பகுதிகளில் பயிரிட்ட எள் சாகுபடியும் அறுவடைக்குப் பின், தற்போது பிற இடங்களில் பயிரிடப்பட்டிருந்த எள் செடியைக் காப்பாற்றியுள்ளனர். இதனால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## மண்அரிப்பையும் தடுப்பதுடன்,ஆரோக்கியமும் தரும் வெட்டிவேர்

திண்டுக்கல்;மண் அரிப்பை தடுப்பதுடன், உடல் ஆரோக்கியத்தையும் தரும் மூலிகையான வெட்டிவேர் சிறுமலையில் அதிகளவு பயிரிடப்பட்டு வருகிறது.திண்டுக்கல் அருகே உள்ள சிறுமலையை மூலிகையின் சொர்க்கம் எனலாம். அந்தளவு அங்கு ஏராளமான மூலிகைச் செடிகள் வளர்கின்றன. இங்குள்ள மருத்துவ குணம் உள்ள மூலிகைகள் குறித்து சென்னை சித்த மருத்துவ கல்லூரி மாணவர்கள் ஆய்வு மேற் கொண்டு வருகின்றனர். இந்த மூலிகைச் செடிகளை மலையில் வசிக்கும் ஆதிவாசிகள் பலர் பறித்து விற்பனை செய்கின்றனர். மூலிகையின் அருமை, பெருமை தெரியாமல் குறைந்த விலைக்கு விற்பவர்கள் மீது வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்த மூலிகைகளை பல வியாபாரிகள் வாங்கி வெளிமாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றனர்.

வெட்டிவேர்: சிறுமலையில் மண் அரிப்பை தடுக்கும் தன்மை உள்ள மூலிகை செடியாக வெட்டிவேர் உள்ளது. இதன் வாசனை நுரையீரலுக்கு தூய்மையான காற்றையும், உடலுக்கு குளிர்ச்சியையும் தருகிறது. மேலும் முடிவளர்வதற்கும் ஏற்ற மருந்தாகும்.

விவசாயி கஜபதி கூறியதாவது: சிறுமலையில் மழை பெய்தால், மண் அரிப்பு அதிகமாக இருக்கும். இதை தடுக்கும் சக்தி கொண்டது வெட்டிவேர் மட்டுமே. இந்த வேர் காற்றை சுத்தப்படுத்தி, தூய்மையாக்கி தரக்கூடியது. வெட்டிவேரை வீட்டில் வளர்த்தால் நல்ல காற்று கிடைக்கும், என்றார்.

## திண்டுக்கல்லில் துவங்கியது:கருணைக் கிழங்கு அறுவடைகிலோ ரூ.40க்கு விற்பனை

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் கருணைக் கிழங்கு சாகுபடியில் அறுவடை காலம் துவங்கியுள்ளது. தமிழகத்தில் திருவண்ணாமலை, புதுக்கோட்டை பகுதியில்

கருணைக் கிழங்கு சாகுபடியாகிறது. தென் மாவட்டங்களில் கருணைக்கிழங்கு சாகுபடிக்கு ஏற்ற மண் வளம் இல்லை. இதனால் விவசாயிகள் பயிரிடாமல் தவிர்த்து வந்தனர். இந்நிலையில் இயற்கை முறையில் ஆட்டுத் தொழுவ உரங்களை வைத்து கருணைக்கிழக்கு பயிரிட்டார் திண்டுக்கல் விவசாயி திருவேங்கடம். இவரது அரை ஏக்கர் நிலம் சிறுமலை அடிவாரத்தில் நரசிங்கபுரத்தில் உள்ளது. இதில் சுமார் 10 ஆயிரம் செடிகள் வளரும் வகையில் கருணைக் கிழங்கை நட்டார். எட்டு மாதங்களாக முறையாக பராமரித்தார். இதனால், தற்போது ஒரு செடிக்கு 2 கிலோ அளவில் கருணைக் கிழங்கு விளைந்துள்ளது. கருணைக் கிழங்கு நன்றாக விளையும் மாவட்டங்களில்கூட செடிக்கு முக்கால் கிலோ என்ற அளவிலேயே விளைகிறது. ஆனால் திண்டுக்கல்லில் ஒரு செடிக்கு 2 கிலோ வரை வளர்ந்து அறுவடைக்கு தயாராகியுள்ளது. இக்கிழங்கு கிலோ ரூ.35 முதல் ரூ.40 வரை தற்போது விற்பனையாகிறது.

விவசாயி திருவேங்கடம் கூறியதாவது: மண்வளத்தை நன்றாக பயிருக்கு ஏற்றவாறு பராமரித்தால் எந்தப்பயிரிலும் நல்ல மகசூல் காணலாம். அரை ஏக்கரில் 10 ஆயிரம் செடிகள் நட்டு, சொட்டு நீர்ப்பாசனம் மூலம் பராமரித்தேன். செடிக்கு 2 கிலோ முதல் 3 கிலோ வரை விளைந்துள்ளது. அடுத்த 4 நாட்கள் வரை அறுவடை நடக்க உள்ளது. இயற்கை முறையில் விளைந்ததால் மக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது, என்றார்.

**அழிவின் விளிம்பில் ஆரஞ்சு விவசாயம்**

தாண்டிக்குடி: தாண்டிக்குடி கீழ்மலைப் பகுதியில் ஆரஞ்சு விவசாயம் வைரஸ் நோய் பாதிப்பால் சுருங்கி வருகிறது.திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதியில் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் ஆரஞ்சு விவசாயம் செய்யப்படுகிறது. இவற்றை கொடை ஆரஞ்சு, கமலா ஆரஞ்சு என அழைப்பதுண்டு. இதன் சுவை, மெல்லிய தோல், அதிக சதைப் பிடிப்பு ஆகியன தனிச்சிறப்பு.

காலப்போக்கில் நாக்பூர் ஆரஞ்சு வரவால் விலை சரிவை சந்தித்தது. கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்தது. தொடர்ந்து பருவ காலங்களில் மாறுபட்ட சீதோஷ்ண நிலை, தொடர் மழை காரணமாக எதிர்பார்த்த மகசூல் கிடைக்கவில்லை.

இந்நிலையில் விலையாவது ஆறுதலை அளிக்கும் என்ற நம்பிக்கை கடந்தாண்டும், தற்போதும் பொய்த்து போனது. தற்போது பறிக்கப்படும் காய்கள் மதுரை, பழநி பகுதிகளுக்கு சென்ற நிலையில் கிலோ ரூ.18 முதல் 20 வரை விற்கிறது.

ஆரஞ்சு விவசாயிகள் கூறியதாவது: கடந்த சில ஆண்டுகளாக மாறுபட்ட சீதோஷ்ண நிலை காரணமாக ஆரஞ்சில் "கேங்கர் வைரஸ்' பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இது காய்களில் கரும்புள்ளி, இலை கருகல், காம்புகள் உதிர்தல் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

இதை சரிசெய்ய பூப்பூத்த தருணத்தில் இருந்து இருபது நாட்களுக்கு ஒருமுறை என, ஆறு முறை மருந்து தெளிக்க வேண்டும். இடுபொருள், மேலாண்மை, பராமரிப்பு என ஏக்கருக்கு ரூ.60 ஆயிரம் வரை செலவாகிறது. அதேநேரம் தற்போதைய விலை அடிப்படையில் ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் மட்டும் வருவாய் கிடைக்கிறது. கைகழுவும் விவசாயிகள்: தொடர் மழை காரணமாக திரட்சியான காய்கள் குறைந்து பழங்கள் சிறுத்து காணப்படுகிறது.

வைரஸ் தாக்குதலை கட்டுப்படுத்த தோட்டக்கலை அதிகாரிகள் முயற்சிக்கவில்லை. பெயரளவிற்கு தோட்டங்களை பார்வையிட்டு செல்கின்றனர். வைரஸ் தாக்குதல், பராமரிப்பு செலவினங்களை கணக்கிடுகையில் இவ்விவசாயம் நஷ்டத்தை ஏற்படுத்துவதால் விவசாயிகள் ஆரஞ்சை கை கழுவியுள்ளனர். அன்னாசியை தொடர்ந்து மலைப்பகுதியில் ஆரஞ்சு விவசாய பரப்பு பாதியாக குறைந்து மரங்கள் காய்ந்து விறகுக்கு பயன்படுத்துகின்றனர், என்றார். அழிந்து வரும் ஆரஞ்சு விவசாயத்தை காப்பாற்ற தோட்டக்கலை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 2017க்குள் விவசாயிகளிடம் மண்வள அட்டைகள் பெறுவது அவசியம்

திண்டுக்கல்: நாட்டிலுள்ள விவசாயிகள் அனைவருக்கும் 2017 டிசம்பருக்குள் மண்வள அட்டைகள் கட்டாயம் வழங்கியிருக்க வேண்டும், என மத்திய அரசு மாநில அரசுகளை வலியுறுத்திஎயுள்ளது. தமிழக அரசு, "பண்ணை பயிர் மேலாண்மை திட்டம் என்ற பெயரில் மண் வளம் குறித்த சிறப்பு திட்டத்தை துவக்கியது. இந்த திட்டம் 3 ஆண்டுகளில் ஊராட்சிகளில் சர்வே எண்களின் அடிப்படையில் மண் மாதிரி தகவல்கள் சேகரிக்கப்பட்டு பதிவேற்றமானது. சிறந்த முறையில் திட்டத்தை செயல்படுத்தி நடைமுறைப்படுத்தி தமிழக அரசிற்கு மத்திய அரசு கிர்ஷி நிர்மன் விருது வழங்கி, திட்ட விரிவாக்கத்திற்கு ரூ.3 கோடி வழங்கியது.

பின் இந்த திட்டத்தை நாடுமுழுவதும் பரப்புவதற்கு மத்திய வேளாண் அமைச்சகத்தின் ஒப்புதலில், மண் வள அட்டை வழங்கும் திட்டம் (மிஷன் ஆப் சாயில் ஹெல்த் கார்டு) துவங்கி மாநிலங்களில் துவங்கப்பட்டது. தற்போது இந்த திட்டம் 2 ஆண்டுகளில் முடிக்கப்பட உள்ளது. தண்ணீர் உள்ள நிலத்தில் 2.5 எக்டேர் அளவில் ஒரு மண் மாதிரியும், தண்ணீர் இல்லாத நிலத்தில் 10 எக்டேருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு விபரங்கள் பதிவேற்றப்படுகிறது.

வேளாண் அலுவலர்களின் ஆய்விற்கு பின்,பதிவேற்ற விபரங்கள், விவசாயிகள் பெயர்கள், அடங்கிய மண் வள அட்டை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்த மண் வள அட்டைகளை டிசம்பர் 31, 2017க்குள் வழங்க மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

**தென்னை, வாழைக்கு ஊடுபயிராகபாசிப்பயறு,வெங்காயம் சாகுபடி**

தேவதானப்பட்டி:பெரியகுளம் தாலுகாவில் வாழை, தென்னை சாகுபடியில் ஊடுபயிராக குறுகிய கால பயிர்கள் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம்காட்டி வருகின்றனர். முதலக்கம்பட்டியில் வாழைக்குள் பாசிப்பயிர் பயிரிட்டுள்ளனர்.பெரியகுளம் தாலுகாவில் மஞ்சளார் அணை, சோத்துப்பாறை அணை , ஜி.கல்லுப்பட்டி பச்சிலை நாச்சியம்மன் அணை மற்றும் வராகநதியில் வரும் நீரால் குள்ளப்புரம் பெரிய கண்மாய், சில்வார்பட்டி சிறுகுளம், ஜெயமங்கலம் பெரிய கண்மாய், கெங்குவார்பட்டி மத்துவார்குளம், சாத்தாகோயில்பட்டி செங்குளம், லட்சுமிபுரம் கண்மாய் உட்பட 30 க்கும்

மேற்பட்ட கண்மாய்கள் நிரம்புகிறது. இந்த கண்மாய் நீரை நம்பி பெரியகுளம் தாலுகாவில் மேல்மங்கலம், அ.வாடிப்பட்டி, வடுகபட்டி உட்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் நெல், வாழை, கரும்பு, தென்னை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

வாழை நடவு செய்த வயல்களில் 45 முதல் 60 நாட்களுக்குள் பலன் தரக்கூடிய குறுகிய கால பயிர்களான தட்டை, பாசிப்பயிர், சிறிய வெங்காயம் போன்றவற்றை சாகுபடி செய்து வருகின்றனர். மேலும், சில இடங்களில் தென்னை மரங்களுக்குள் இலை உற்பத்திக்காக வாழை சாகுபடி செய்துள்ளனர். ஊடுபயிர் சாகுபடி குறித்து விவசாயி பெ.கணேசன் கூறியதாவது: வாழை பயிரிட்டு பலன் கிடைப்பதற்கு 10 முதல் 12 மாதங்கள் ஆகும். அதுவரை செலவு தான். வாழையுடன் ஊடுபயிராக குறுகிய கால பயிர்களை நடவு செய்வதால் குறைந்த நாட்களில் வருவாய் கிடைக்கிறது.
அது வாழை பராமரிப்பு செலவிற்கு பயன்படுகிறது,என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வெள்ளச் சேத ஆய்வறிக்கையை விரைந்து அளியுங்கள்: மத்தியக் குழுவிடம் முதல்வர் ஜெயலலிதா வேண்டுகோள்**



தமிழகத்தில் மழை-வெள்ளம் பாதித்த இடங்களில் விரிவான ஆய்வு மேற்கொண்டு மத்திய அரசிடம் அறிக்கையை விரைந்து அளிக்குமாறு மத்திய குழுவுக்கு முதல்வர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார். இதன் மூலம், எந்த தாமதமும் இன்றி நிதியுதவியை மத்திய அரசு விடுவிக்க இயலும் என்றும்

அவர் தெரிவித்துள்ளார்.தமிழகத்தில் மழை-வெள்ளம் பாதித்த இடங்களைப் பார்வையிட, உள்துறை இணைச் செயலாளர் டி.வி.எஸ்.என்.பிரசாத் தலைமையிலான 8 உறுப்பினர்கள் அடங்கிய மத்திய குழு வியாழக்கிழமை சென்னை வந்தது. இந்தக் குழுவினர், முதல்வர் ஜெயலலிதாவை தலைமைச் செயலகத்தில் காலை 11.20 மணிக்குச் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பு சுமார் 20 நிமிஷங்கள் நீடித்தது. அப்போது மத்தியக் குழுவிடம் முதல்வர் பேசியது:

தமிழகத்தில் நவம்பர் மாதத்தில் பெய்த கனமழை காரணமாக, கடலூர், காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் ஆகிய நான்கு வட கடலோர மாவட்டங்கள் கடுமையான அளவுக்கு சேதம் அடைந்துள்ளன. வடகிழக்கு பருவமழையை ஒட்டி எனது அறிவுறுத்தல்கள்படி, மாநிலத்திலுள்ள அனைத்து துறைகளும், மாவட்ட ஆட்சியர்களும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தனர்.

ஆனாலும், கடந்த பல நாள்களாக பெய்த கடும் மழையானது, மிகப்பெரிய அளவுக்கு சேதங்களையும், பாதிப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. உதாரணத்துக்கு, கடலூர் மாவட்டத்திலுள்ள நெய்வேலியில் கடந்த 9-ஆம் தேதி ஒருநாள் மட்டும் 437 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது. சென்னையில் கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலான காலத்தில் மிக பலத்த மழையளவை நவம்பரில் பதிவு செய்துள்ளது. இதுவும், இந்த நவம்பர் மாதத்தில் முதல் 20 நாள்களில் மழை பொழிந்துள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழையானது 483.6 மில்லிமீட்டர் என்ற அளவை ஏற்கெனவே எட்டியுள்ளது. இது வரும் டிசம்பர் வரையிலான வடகிழக்கு பருவமழையின் மொத்த அளவான 440.4 மில்லிமீட்டரை விட அதிகமாகும்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்: பருவமழையை ஒட்டி, மாநில அரசால் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் உயிரிழப்புகளும், பொருள் சேதங்களும் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன. பருவமழை பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு, நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உயர்நிலை அளவிலான அமைச்சர்களும், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் உடனடியாக நியமிக்கப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்களில் 4 லட்சத்துக்கும் அதிகமானோர்

நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு உணவும், உறைவிடமும் அளிக்கப்பட்டது.

பருவமழையால் ஏற்பட்ட பாதிப்புகளைத் தொடர்ந்து மீட்பு, நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ.500 கோடி உடனடியாக விடுவிக்கப்பட்டது. எனினும் மிக பலத்த மழையின் விளைவாக ஏற்பட்ட சேதம்-அழிவுகள், சீரமைப்பு நடவடிக்கைகளுக்கு மேலும் அதிகத் தொகை தேவைப்படும் என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

மேலும், சேத விவரங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. வடகிழக்கு பருவமழை முடிவடைய இன்னும் பலவாரங்கள் உள்ளன. அப்போது, மேலும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகக் கருதப்படுகிறது.

பிரதமருக்கு கடந்த 23-ஆம் தேதியன்று அனுப்பிய விரிவான கோரிக்கை மனுவில், உடனடி மீட்பு-நிவாரண நடவடிக்கைகளுக்காகவும், உட்கட்டமைப்புகளை நிரந்தரமாகச் சீரமைக்கவும் ரூ.8,481 கோடி தேவைப்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தேன்.

உடனடியாக ரூ.2 ஆயிரம் கோடி அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தேன். மேலும், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதங்களை நேரில் பார்வையிட்டு தாமதமின்றி மத்திய அரசின் நிதியுதவியைப் பெற ஏதுவாக மத்தியக் குழுவை அனுப்புமாறும் பிரதமரைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

மத்தியக் குழுவை உடனடியாக தமிழகத்துக்கு அனுப்பி வைத்துள்ள பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நிவாரணத்துக்கும், உட்கட்டமைப்பு, சீரமைப்புப் பணிகளுக்கும் தேவைப்படும் நிதி, தமிழகத்தின் நிதி ஆதாரத்தை விட அதிகமாக உள்ளது.

எனவே, மத்தியக் குழுவினர் தமிழகத்தில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து விரிவாக மதிப்பீடு செய்து அதன் அறிக்கையை விரைந்து மத்திய உள்துறை அமைச்சகத்திடம் அளிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் மத்திய நிதியுதவி தாமதமின்றி கிடைக்க வழி ஏற்படும் என்று முதல்வர் ஜெயலலிதா பேசினார்.

**மத்தியக்குழு உறுதி**

சென்னை, நவ. 26: தமிழகத்தில் வெள்ளச் சேதங்களை பார்வையிட்டு மத்திய

அரசுக்கு விரைந்து அறிக்கை அளிப்போம் என்று குழுவின் தலைவர் டி.வி.எஸ்.என்.பிரசாத் தெரிவித்தார்.

தமிழக அரசால் அனுப்பி வைக்கப்பட்ட வெள்ளச் சேதம் குறித்த விரிவான அறிக்கையை படித்தேன். அதிலிருந்து தமிழக அரசு வெள்ளச் சேதங்களைத் தடுப்பதற்கு எடுத்த நடவடிக்கைகள்-உடனடி நிவாரண-சீரமைப்புப் பணிகள் குறித்து தெளிவாக கூறப்பட்டிருந்தன.

மேலும், தமிழக அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் உயிரிழப்பு-வெள்ளச் சேதங்கள் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டதும் தெரியவந்தது. மழை, வெள்ளம் பாதித்த பகுதிகளை மத்திய குழு நேரில் பார்வையிட்டு, மத்திய அரசுக்கு விரைந்து அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்று பிரசாத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் மழை-வெள்ளம் பாதித்த இடங்களில் விரிவான ஆய்வு மேற்கொண்டு மத்திய அரசிடம் அறிக்கையை விரைந்து அளிக்குமாறு மத்திய குழுவுக்கு முதல்வர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார். இதன் மூலம், எந்த தாமதமும் இன்றி நிதியுதவியை மத்திய அரசு விடுவிக்க இயலும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். தமிழகத்தில் மழை-வெள்ளம் பாதித்த இடங்களைப் பார்வையிட, உள்துறை இணைச் செயலாளர் டி.வி.எஸ்.என்.பிரசாத் தலைமையிலான 8 உறுப்பினர்கள் அடங்கிய மத்திய குழு வியாழக்கிழமை சென்னை வந்தது. இந்தக் குழுவினர், முதல்வர் ஜெயலலிதாவை தலைமைச் செயலகத்தில் காலை 11.20 மணிக்குச் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பு சுமார் 20 நிமிஷங்கள் நீடித்தது. அப்போது மத்தியக் குழுவிடம் முதல்வர் பேசியது:

தமிழகத்தில் நவம்பர் மாதத்தில் பெய்த கனமழை காரணமாக, கடலூர், காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் ஆகிய நான்கு வட கடலோர மாவட்டங்கள் கடுமையான அளவுக்கு சேதம் அடைந்துள்ளன. வடகிழக்கு பருவமழையை ஒட்டி எனது அறிவுறுத்தல்கள்படி, மாநிலத்திலுள்ள அனைத்து துறைகளும், மாவட்ட ஆட்சியர்களும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தனர். ஆனாலும், கடந்த பல நாள்களாக பெய்த கடும் மழையானது, மிகப்பெரிய அளவுக்கு சேதங்களையும், பாதிப்புகளையும்

ஏற்படுத்தியுள்ளது. உதாரணத்துக்கு, கடலூர் மாவட்டத்திலுள்ள நெய்வேலியில் கடந்த 9-ஆம் தேதி ஒருநாள் மட்டும் 437 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது. சென்னையில் கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலான காலத்தில் மிக பலத்த மழையளவை நவம்பரில் பதிவு செய்துள்ளது. இதுவும், இந்த நவம்பர் மாதத்தில் முதல் 20 நாள்களில் மழை பொழிந்துள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழையானது 483.6 மில்லிமீட்டர் என்ற அளவை ஏற்கெனவே எட்டியுள்ளது. இது வரும் டிசம்பர் வரையிலான வடகிழக்கு பருவமழையின் மொத்த அளவான 440.4 மில்லிமீட்டரை விட அதிகமாகும்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்: பருவமழையை ஒட்டி, மாநில அரசால் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் உயிரிழப்புகளும், பொருள் சேதங்களும் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன. பருவமழை பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு, நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உயர்நிலை அளவிலான அமைச்சர்களும், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் உடனடியாக நியமிக்கப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்களில் 4 லட்சத்துக்கும் அதிகமானோர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு உணவும், உறைவிடமும் அளிக்கப்பட்டது.

பருவமழையால் ஏற்பட்ட பாதிப்புகளைத் தொடர்ந்து மீட்பு, நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ.500 கோடி உடனடியாக விடுவிக்கப்பட்டது. எனினும் மிக பலத்த மழையின் விளைவாக ஏற்பட்ட சேதம்-அழிவுகள், சீரமைப்பு நடவடிக்கைகளுக்கு மேலும் அதிகத் தொகை தேவைப்படும் என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

மேலும், சேத விவரங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. வடகிழக்கு பருவமழை முடிவடைய இன்னும் பலவாரங்கள் உள்ளன. அப்போது, மேலும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகக் கருதப்படுகிறது.

பிரதமருக்கு கடந்த 23-ஆம் தேதியன்று அனுப்பிய விரிவான கோரிக்கை மனுவில், உடனடி மீட்பு-நிவாரண நடவடிக்கைகளுக்காகவும், உட்கட்டமைப்புகளை நிரந்தரமாகச் சீரமைக்கவும் ரூ.8,481 கோடி தேவைப்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தேன்.

உடனடியாக ரூ.2 ஆயிரம் கோடி அனுமதிக்கப்பட வேண்டும் என்றும்

கோரிக்கை விடுத்திருந்தேன். மேலும், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதங்களை நேரில் பார்வையிட்டு தாமதமின்றி மத்திய அரசின் நிதியுதவியைப் பெற ஏதுவாக மத்தியக் குழுவை அனுப்புமாறும் பிரதமரைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

மத்தியக் குழுவை உடனடியாக தமிழகத்துக்கு அனுப்பி வைத்துள்ள பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நிவாரணத்துக்கும், உட்கட்டமைப்பு, சீரமைப்புப் பணிகளுக்கும் தேவைப்படும் நிதி, தமிழகத்தின் நிதி ஆதாரத்தை விட அதிகமாக உள்ளது.

எனவே, மத்தியக் குழுவினர் தமிழகத்தில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து விரிவாக மதிப்பீடு செய்து அதன் அறிக்கையை விரைந்து மத்திய உள்துறை அமைச்சகத்திடம் அளிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் மத்திய நிதியுதவி தாமதமின்றி கிடைக்க வழி ஏற்படும் என்று முதல்வர் ஜெயலலிதா பேசினார்.

**மத்தியக்குழு உறுதி**

சென்னை, நவ. 26: தமிழகத்தில் வெள்ளச் சேதங்களை பார்வையிட்டு மத்திய அரசுக்கு விரைந்து அறிக்கை அளிப்போம் என்று குழுவின் தலைவர் டி.வி.எஸ்.என்.பிரசாத் தெரிவித்தார்.

தமிழக அரசால் அனுப்பி வைக்கப்பட்ட வெள்ளச் சேதம் குறித்த விரிவான அறிக்கையை படித்தேன். அதிலிருந்து தமிழக அரசு வெள்ளச் சேதங்களைத் தடுப்பதற்கு எடுத்த நடவடிக்கைகள்-உடனடி நிவாரண-சீரமைப்புப் பணிகள் குறித்து தெளிவாக கூறப்பட்டிருந்தன.

மேலும், தமிழக அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் உயிரிழப்பு-வெள்ளச் சேதங்கள் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டதும் தெரியவந்தது.

மழை, வெள்ளம் பாதித்த பகுதிகளை மத்திய குழு நேரில் பார்வையிட்டு, மத்திய அரசுக்கு விரைந்து அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்று பிரசாத் தெரிவித்துள்ளார்.

**காய்கறிகள் வரத்து அதிகரித்தும் விலை குறையவில்லை**

சென்னையில் ஓரிரு நாள்களாக மழை சற்று குறைந்துள்ளதால் கோயம்பேடு சந்தைக்கு காய்கறிகள் வரத்து அதிகரித்துள்ளது.

இருப்பினும் தேவை அதிகரித்ததாலும், பாதிக்கும் மேற்பட்ட தினசரி

சந்தைகளுக்கு வெள்ளிக்கிழமை (நவ.27) உள்ளூர் விடுமுறை என்பதாலும் காய்கறிகளின் விலை உயர்ந்துள்ளது. சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் 60-க்கும் மேற்பட்ட தினசரி காய்கறிச் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. தியாகராயநகர், நுங்கம்பாக்கம், அடையாறு, அம்பத்தூர் உள்பட சென்னை நகர்ப் பகுதியில் மட்டும் 40 தினசரி சந்தைகள் உளளன. இந்த சந்தைகளைச் சேர்ந்த வியாபாரிகள் கோயம்பேடு காய்கறிச் சந்தையில் மொத்த விலைக்கு வாங்கி தங்களது பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர். மாதந்தோறும் கடைசி வெள்ளிக்கிழமை இந்தக் காய்கறிச் சந்தைகளுக்கு விடுமுறை நாளாகும். ஆனால், பொதுமக்களின் நலன் கருதி குறிப்பிட்ட இடங்களில் உள்ள சந்தைகள் செயல்படும். வெள்ளிக்கிழமை விடுமுறை என்பதால் கோயம்பேடு சந்தையில் வழக்கமான அளவைக் காட்டிலும் வியாழக்கிழமை (நவ.26) காய்கறிகள் சற்று அதிகமாக விற்பனையானது. மேலும், காய்கறிகளின் வரத்து அதிகமாக இருந்தாலும், தற்போது தேவையும் அதிகமாக இருப்பதால் அவற்றின் விலை குறையவில்லை.

தக்காளி விலை குறைவு: குறிப்பாக கத்தரிக்காய், அவரைக்காய், வெண்டைக்காய், முருங்கைக்காய் ஆகியவை உள்பட பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் காய்கறிகளின் விலை கடந்த மாதத்தைக் காட்டிலும் 30 சதவீதம் வரை விலை அதிகரித்துள்ளது. இருப்பினும் தக்காளி, கடந்த வாரத்தைக் காட்டிலும் மொத்த விலையில் கிலோவுக்கு ரூ.25 வரை குறைந்துள்ளது. சில்லறை விலையில் வியாழக்கிழமை ரூ.45 முதல் ரூ.55 வரை விற்பனையானது.

சென்னை புறநகர்ப் பகுதிகளில் உள்ள தினசரி சந்தைகள், கடைகளில் வியாழக்கிழமை நிலவரப்படி காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோ):

தக்காளி- ரூ.45-55, பெரிய வெங்காயம்- ரூ.35-50, உருளைக்கிழங்கு- ரூ.35, முட்டைக்கோஸ்- ரூ.28, வெண்டைக்காய்- ரூ.70, கத்தரிக்காய்- ரூ.60-85, முருங்கைக்காய்- ரூ.90-130, பாகற்காய்- ரூ.60, சேனைக்கிழங்கு- ரூ.40, கேரட்- ரூ.50-65, பீன்ஸ்- ரூ.70-90, கொத்தவரை- ரூ.45, பச்சை மிளகாய்- ரூ.35.

**நிலவேம்பு குடிநீர் வழங்கல்**

உசிலம்பட்டி நகராட்சி அலுவலகம் முன் நிலவேம்பு குடிநீர் வியாழக்கிழமை விநியோகிக்கப்பட்டது. இதில் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) ரத்தினவேல், மேலாளர் முருகராஜ், சுகாதார ஆய்வாளர்கள் ஜெயச்சந்திரன், செல்வராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிலவேம்பு குடிநீரை வழங்கினர்.

**மண் பரிசோதனையை துல்லியமாக மேற்கொள்ள தமிழகத்தில் 5 வேளாண் மையங்களுக்கு நவீன கருவிகள்**

மண் பரிசோதனை முடிவுகளை நவீன கருவிகளைப் பயன்படுத்தி துல்லியமாகக் கண்டறிவதற்கு, தமிழகத்தில் முதல் கட்டமாக திண்டுக்கல், கோவை, நாமக்கல் உள்ளிட்ட 5 வேளாண் அறிவியல் மையங்கள் (கே.வி.கே.) மூலம் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

விளை நிலங்களில், காரம் மற்றும் அமிலத் தன்மையை அறிந்து, அதற்கேற்ற வகையில் தளை, மணி, சாம்பல் மற்றும் நுண்ணூட்ட சத்துக்களை உரமாக பயன்படுத்தி, விளைச்சலை மேம்படுத்துவதற்காக மண் வள பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

மண் வளம் குறித்து துல்லியமாக ஆய்வு செய்யும் போது, இடுபொருள்களை பயன்படுத்துவதில் சிக்கனத்தை கடைபிடிக்க முடியும். அதன் மூலம், ரசாயன உரங்களுக்கு வழங்கப்படும் மானியத்தையும் சிக்கனப்படுத்த முடியும். ஆனால், விவசாயிகள் பரிசோதனை செய்வதற்காக வழங்கும் மண்ணில் உள்ள சத்துக்கள் குறித்த ஆய்வு அறிக்கைகளில் பெரும்பாலும் ஒரே மாதிரியான முடிவுகளாக இருப்பது தெரியவந்தது.

நாடு முழுவதும், பேரூட்ட சத்துக்களைக் கண்டறிய 1200 மையங்களும், நுண்ணூட்ட சத்துக்களைக் கண்டறிய 400 மையங்களும் உள்ளன. 1200 மையங்கள் மூலம் ஆண்டுக்கு 1.2 கோடி மாதிரிகளை (25 சதவீதம்) மட்டுமே ஆய்வு செய்ய முடியும். ஒரு மண் பரிசோதனை மேற்கொள்வதற்கு ரூ.160 முதல் ரூ.200 வரை செலவு செய்தாலும், பரிசோதனை முடிவுகள் எவ்வித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இதனை அடுத்து, மண் பரிசோதனைப் பணிகளை துல்லியமாக மேற்கொள்ள வேண்டும் என்பதில் மத்திய அரசு தீவிர கவனம் செலுத்தியது.

அதன்படி, மத்திய பிரதேச மாநிலம் போபாலில் அமைந்துள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்தில் செயல்பட்டு வரும் இந்திய மண் ஆய்வுக் கழகம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் நவீன மண் பரிசோதனை கருவிகளை உருவாக்கியுள்ள இந்திய மண் ஆய்வுக் கழகம், அவற்றை வேளாண் அறிவியல் மையங்கள் (கே.வி.கே.) மூலம் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்து காந்திகிராம வேளாண்மை அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் அ.உதயகுமார் தெரிவித்ததாவது:

இந்த திட்டம், நாடு முழுவதும் 55 கே.வி.கே. மையங்களிலும், தமிழகத்தில் கோவை,திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், கரூர் மையங்களிலும் முதல்கட்டமாக பயன்பாட்டிற்கு வர உள்ளது.

கார, அமில தன்மையைக் கண்டறியும் கருவி, மண் செரிவூட்டும் கருவி, மண் கலக்கி, நுண் சல்லடை, கனிமங்களைக் கண்டறிவதற்கு 10 வகையான ரசாயனங்கள், மின்வசதி இல்லாத இடங்களில் பயன்படுத்த சிறிய சோலார் பேனல் கருவி, 600 கிராம் வரை அளவிடும் நவீன எடை கருவி உள்ளிட்ட ரூ.75 ஆயிரம் மதிப்பிலான உபகரணங்கள் மண் பரிசோதனை மேற்கொள்வதற்காக வழங்கப்படுகிறது.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு, கே.வி.கே. மையம் மூலம் பயிற்சி அளித்து மண் பரிசோதனை செய்யும் பணிகளைத் துல்லியமாகவும், எளிமையாகவும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முதல்கட்டமாக அனுசரனை ஆராய்ச்சி பாத்தி மற்றும் முதன்நிலை பயிர் பெருக்கு திட்டங்கள் செயல்படுத்தப்படும் கிராமங்களில் நவீன கருவிகள் பயன்பாட்டிற்கு வர உள்ளது என்றார்.

**விவசாய நுண்ணீர் பாசனத் திட்ட செயல் விளக்க விழிப்புணர்வு முகாம்**

ஸ்ரீவில்லிபுத்தூர், பூவாணியில் உள்ள அரசு தோட்டக் கலைப் பண்ணையில், பிரதமரின் விவசாய நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான ஒரு நாள் விழிப்புணர்வு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு தோட்டக் கலை துணை இயக்குநர் பொ.ராஜன் தலைமை வகித்தார்.

தோட்டக் கலை அலுவலர் இ.நடராஜன் வரவேற்றார். பருத்தி ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியை டாக்டர் செல்வி ரமேஷ், உளவியல் நிபுணர் சி.தவராஜன், வத்திராயிருப்பு தோட்டக் கலை உதவி இயக்குநர் ஆ.மாரிமுத்து ஆகியோர் பேசினர். விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது. ராஜபாளையம் தோட்டக் கலை அலுவலர் எஸ்.கலைவாணி நன்றி கூறினார்.

## கமுதி அரசு மருத்துவமனையில் நிலவேம்பு குடிநீர் வழங்கல்

கமுதி அரசு மருத்துவமனையில் நிலவேம்பு குடிநீர் வழங்கும் சிறப்பு முகாம் நடைபெற்றது. ஒன்றியக் குழுத் தலைவர் டி.பாலு தலைமையில் நடைபெற்ற முகாமுக்கு பேரூராட்சித் தலைவர் எஸ்.கே.சி.ரமேஷ்பாபு, கவுன்சிலர் முத்துராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஏற்பாடுகளை அரசு சித்த மருத்துவர் விஜயா செய்திருந்தார். முகாமில் கமுதி சுற்றுவட்டாரப் பகுதி பொதுமக்கள் மற்றும் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் என 300-க்கும் மேற்பட்டோர் பங்கேற்று பயனடைந்தனர்.

## ஆழியாறு அணை கரையோர கிராம மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

ஆழியாறு அணையின் நீர்மட்டம் 118 அடியை எட்டியுள்ளதால் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பி.ஏ.பி., திட்டத்தில் முக்கிய அணையாக உள்ள ஆழியாறு அணை 120 அடி உயரம் கொள்ளளவு கொண்டது. வடகிழக்கு பருவ மழை காரணமாக ஆழியாறு அணை நீர்மட்டம் கடந்த சில நாள்களாக சீராக உயர்ந்து வந்தது. வியாழக்கிழமை இரவு நீர்மட்டம் 118 அடியாக உயர்ந்ததால் பொதுப்பணித் துறை அதிகாரிகள் வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதையொட்டி, கரையோர கிராம மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி அறிவுறுத்தியுள்ளனர்.

## நெற்பயிர் பூச்சிகளைக் கண்டறிய பண்ணைப் பள்ளி தொடக்கம்

நெற்பயிர் பூச்சிகளைக் கண்டறிவதற்கான பண்ணைப் பள்ளி நம்பியூரை அடுத்த கூடக்கரையில் வியாழக்கிழமை தொடங்கப்பட்டது.

இந்தப் பண்ணைப் பள்ளியைத் தொடங்கி வைத்த நம்பியூர் வேளாண்மை உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி பேசியதாவது:

நம்பியூர் வட்டாரத்தில் அட்மா திட்டம் சார்பில் நெல் சாகுபடி விவசாயிகளுக்காக பண்ணைப் பள்ளி தொடங்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் மாசுபடாமல் இயற்கையோடு இணைந்து பயிர் மேலாண்மையைக் கடைப்பிடிப்பதால் இடுபொருள் செலவு மீதமாகும். சிலந்தி வகைகள், ஊசித்தட்டான், பொறிவண்டு, குளவி வகைகள் போன்ற பூச்சிகள் விவசாயிகளின் உற்ற நண்பர்களாக விளங்குகின்றன. இவை பயிர்களைத் தாக்கும் புகையான், தத்துப்பூச்சி, இலைச் சுருட்டுப்புழு போன்ற பல்வேறு வகையான பூச்சிகளைத் தின்று அழித்து விடுகின்றன. பூச்சிக் கொல்லிகளை பயிர்கள் மீது தெளிப்பதால் பயிர்களைப் பாதிக்கும் பூச்சிகள் மட்டுமல்லாமல் நன்மை செய்யக் கூடிய பூச்சி வகைகளும் இறந்து விடுகின்றன. எனவே இயற்கை முறையிலான தொழில்நுட்பங்களை செயல்படுத்த வேண்டும் என்றார்.

இதில், பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலைய நோயியல் துறை பேராசிரியர் மருதாசலம் கலந்து கொண்டு நெல் பயிரில் ஏற்படும் நோய்கள், கட்டுப்பாட்டு முறைகள் குறித்து எடுத்துரைத்தார். அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் அருணாசலம், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அருண்குமார், மணிகண்டன் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

## வேளாண் விழிப்புணர்வுப் பேரணி

பிரஜாபிதா பிரம்ம குமாரிகள் இயக்கம் சார்பில் ஈரோடு பட்டேல் வீதியில் வேளாண் விழிப்புணர்வுப் பேரணி வியாழக்கிழமை நடைபெற்றது.

பேரணியை ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் என்.சிவநேசன், செந்தில்ராஜன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். முன்னதாக, பிரம்ம குமாரிகள் இயக்க ஈரோடு கிளை பொறுப்பாளர்கள் மோகன் பிரசாந்த், லோகநாதன் ஆகியோர் வரவேற்றனர்.

பேரணியில் வேளாண்மை குறித்த குறும்படம் திரையிடப்பட்டது. இதில், விளை நிலத்தில் தியானம் செய்து உரங்களை இட்டால் அதிக மகசூல் கிடைக்கும் என விளக்கப்பட்டது.

ஈரோடு மாவட்டம் முழுவதும் இந்த விழிப்புணர்வுப் பேரணி நடக்க உள்ளதாக பிரம்ம குமாரிகள் இயக்கத்தினர் தெரிவித்தனர்.

**அரசுப் பள்ளி மாணவிகளுக்கு நிலவேம்பு கஷாயம்**

பவானி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற சித்த மருத்துவ முகாமில் 2,500 மாணவிகளுக்கு நிலவேம்பு கஷாயம் வியாழக்கிழமை வழங்கப்பட்டது. இந்நிகழ்சிக்கு பவானி அரசு மருத்துவமனை சித்த மருத்துவர் எஸ்.கண்ணுச்சாமி தலைமை வகித்தார். இம்முகாமில், நிலவேம்பு கஷாயம் சிறப்பு, மழைக்கால தொற்று நோயான காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில், மாணவிகள், ஆசிரியர்கள் உள்பட 25,00 பேருக்கு நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டது. மருத்துவப் பணியாளர் கோபால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**உதகையில் கடும் குளிர்**

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்து வந்த மழை ஓய்ந்துள்ள நிலையில் உதகையில் வியாழக்கிழமை கடும் குளிர் நிலவியது.

உதகையின் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்ட திறந்தவெளி மைதானம், அரசினர் தாவரவியல் பூங்கா, படகு இல்ல வளாகம் ஆகியவற்றில் வியாழக்கிழமை உறை பனி கொட்டியது.

மேலும், உதகை, சுற்றுப் பகுதிகளில் ஏற்பட்ட மேகமூட்டத்தால் வியாழக்கிழமை மாலை கடும் குளிர் நிலவியது. உதகை நகரில் வியாழக்கிழமை காலையில் குறைந்தபட்ச வெப்பநிலை 8 டிகிரியாகவும், அதிகபட்ச வெப்பநிலை 22 டிகிரியாகவும் காணப்பட்டது.

**கால்நடைகளுக்கு சமச்சீர் தீவனம்: பால் சேகரிப்புக் குழுவினருக்குப் பயிற்சி**

செய்யாறில், கால்நடைகளுக்கு சமச்சீர் தீவனம் வழங்குவது குறித்த பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது. தேசிய பால்வள வாரியம், வேலூர் ஆவின் நிறுவனம் இணைந்து நடத்திய இந்த முகாம், செய்யாறு கூட்டுறவு பால்

உற்பத்தியாளர்கள் சங்கக் கட்டடத்தில் 15 நாள்கள் நடைபெற்றது. வேலூர் ஆவின் நிறுவன பொது மேலாளர் அருள்ஜோதி அரசன் தலைமை வகித்து முகாமை தொடங்கி வைத்தார். இதில், மாட்டின் பால் உற்பத்தி மற்றும் உடல் எடைக்கு ஏற்ப பசுந்தீவனம், உலர் தீவனம், தாது உப்புக்களை சரியான விகிதத்தில் அளித்தல் குறித்து விளக்கப்பட்டது. மேலும், கால்நடைகளுக்கு சமச்சீர் தீவனம் வழங்குவதன் மூலம், குறைந்த செலவில் அதிக பால் உற்பத்தி செய்யும் முறை குறித்தும் விளக்கப்பட்டது. ஆவின் கூடுதல் மேலாளர் டோமினிக் திவ்ய நாதன், திட்ட மேலாளர் சாந்தகுமார், மருத்துவர்கள் சைலஜா, சுகன்யா உள்ளிட்டோர் கலந்துகொண்டு பயிற்சி அளித்தனர். கறவை மாடுகளின் பால் திறன், சமச்சீர் தீவன கண்காணிப்பு ஆகியவற்றை கணினியில் எவ்வாறு பதிவு செய்வது என்பது குறித்தும் விளக்கப்பட்டது. அனக்காவூர் பால் குளிரூட்டும் நிலையத்தைச் சேர்ந்த பால் சேகரிப்புக் குழுவினர் பயிற்சி பெற்றனர். ஏற்பாடுகளை குழுவின் மேலாளர் முனுசாமி, விரிவாக்க அலுவலர்கள் நரசிம்மன், குப்புசாமி, ஆவின் கால்நடை மருத்துவர் ஏழுமலை ஆகியோர் செய்திருந்தனர்.

தினகரன்

**வங்கக் கடலில் காற்றழுத்தம் இன்று மழை பெய்யும்**



சென்னை: தென்கிழக்கு வங்கக் கடலில் அந்தமான் மற்றும் அதை ஒட்டிய கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள மேலடுக்கு சுழற்சி காற்றழுத்தமாக உருவாகியுள்ளது. இதனால் தமிழகத்தில் மீண்டும் மழை தொடரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த வாரம் முழுவதும் கொட்டித் தீர்த்த வட கிழக்கு பருவமழையின் தொடர்ச்சியாக தென் கிழக்கு வங்கக் கடலில் மேலடுக்கு சுழற்சி ஏற்பட்டது. அது மெல்ல மெல்ல வலுப்பெற்று காற்றழுத்தமாக மாறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதன்படி, நேற்று தெற்கு அந்தமான் பகுதியில் அந்த மேலடுக்கு சுழற்சி வலுப்பெற்று காற்றழுத்தமாக மாறியுள்ளது. இது மேலும் வலுப்பெற்று காற்றழுத்த தாழ்வு நிலையாகவும் மாறவும் வாய்ப்புள்ளது. இத வடக்கு அல்லது வட மேற்கு திசையில் நகரக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக தமிழக கடலோர மாவட்டங்களில் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு மழை பெய்யும். இன்று லேசான இடியுடன் கூடிய மழை காவிரி டெல்டா மாவட்டங்களில் பெய்யும். நாளை முதல் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், புதுச்சேரி, கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யும். இந்த மழை 30ம் தேதி வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தமிழக நோக்கி நகரும் போது கடலில் மணிக்கு 45 கிமீ வேகம் முதல் 55 கிமீ வேகத்தில் காற்று வீசும். மீனவர் எச்சரிக்கையுடன் இருக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே நேற்று தமிழகத்தில் பரவலாக லேசான மழை பெய்தது. அதிகபட்சமாக செய்யாரில் 70 மிமீ, மரக்காணம் 50 மிமீ, மாமல்லபுரம் 40 மிமீ, கேளம்பாக்கம், செங்கல்பட்டு 10 மிமீ மழை பெய்துள்ளது.

**வயலுக்கு பறவைகளை வரவழைத்தால் பயிர் விளைச்சல் அதிகரிக்கலாம்**

திண்டுக்கல், : வேளாண்மையில் வேதியியல் பொருட்களின் தாக்கம் வெகுவாய் ஊடுருவி விட்டது. விதைநேர்த்தி செய்தல், விதைத்தல், களைச்செடிகளை அழித்தல், பயிர்களில் ஏற்படும் புழு,பூச்சியைக் கட்டுப்படுத்த, கூடுதல் பலன்தர என்று அனைத்து மட்டங்களிலும் ரசாயன உரங்கள் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இதனால் விளைபொருட்களில் ஊடுருவும் வேதியியல் படிமங்கள் உண்பவர்களுக்குள்ளும் புகுந்து பல்வேறு நோய்க ளை

ஏற்படுத்துகிறது. இதுபோன்ற பல்வேறு காரணங்களால் கடந்த சில ஆண்டுகளாகவே புதுப்புது நோய்களும், கேன்சர் போன்ற ஆட்கொல்லி நோய்களின் தாக்கமும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மேலும் மண்ணை இந்த ரசாயனம் வெகுவாய் பாதிப்பு சத்துக்களின் தன்மையை மாற்றி வருகிறது. நீரில்படிந்து பாசன நீரையும், அப்பகுதி காற்றில் கலந்து திறந்த வெளியிலும் இந்த ரசாயன பொருட்கள் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையை மாற்ற சமீபகாலமாகவே இயற்கை விவசாயம் முன்னிறுத்தப்பட்டு வருகிறது. பஞ்சகாவ்யம் போன்றவற்றை உரமாக பயன்படுத்துவதுடன், வேம்பு உள்ளிட்ட கரைசல்களை பூச்சி கொல்லியாகவும் உபயோகித்தால் ரசாயனத்தின் தாக்கத்தை வெகுவாய் குறைக்கலாம் என்று வேளாண்துறை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.
இதன் ஒரு பகுதியாக ஆத்தூரில் ஜெயராமன் என்பவரது தோட்டத்தில் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவியர் கிராமத்தங்கல் திட்டத்தின்கீழ் தங்கி இயற்கை முறையில் பூச்சி,புழுக்களை கட்டுப்படுத்தும் விதம் குறித்து செயல்முறை விளக்கம் அளித்தனர்.
முன்பெல்லாம் வயல்கள், வரப்புகளின் ஓரங்களில் சிறிய மரங்கள் வேலிகள் இருந்தன. வெகுதூரத்தில் இருந்து பறந்து வரும் பறவைகள் அதில் ஓய்வெடுக்கும். அப்போது பயிர்களில் உள்ள புழு,பூச்சிகளை அது உண்டு பசியாறும். இதன் மூலம் இயற்கையான முறையிலே இதுபோன்ற தாக்குதல்கள் கட்டுப்படுத்தப்பட்டன. தற்போது மரங்கள் அருகி விட்டதால் பறவைகள் வயல்பகுதிகளில் அமராமலே கடந்து சென்று விடுகின்றன. இதனால் பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேறு உபயங்களை கையாள வேண்டி உள்ளது. இதன் மூலம் செலவு, நேரவிரயம் உள்ளிட்டவற்றை சந்திக்கும் நிலைக்கு உழவர்கள் தள்ளப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து மாணவியர் இந்துமதி, பாவனா, மோனிஷா,நேனாகுமாரி,பிரியா,சவுமியா,அனிதா ஆகியோர் விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் அளித்ததாவது: வயல்களில் பறவைகள் இருக்கைகளை எளிய முறையில் அமைந்துக் கொள்ளலாம். ஆங்கில எழுத்தான 'வி' வடிவில் உள்ள குச்சிகளை எடுத்து அதன் மேற்புரம் இலேசான பலகையை பொருத்தி விட்டால் போதும். பறவைகள் அதன்மீது வந்து ஓய்வெடுக்கும். இதற்காக

அப்பகுதியில் உள்ள மரங்களில் இருந்தே கிளை ஒடித்து வடிவமைத்துக் கொள்ளலாம். ஒரு ஏக்கருக்கு 5, ஒரு ஹெக்டேர்க்கு 12 என்ற எண்ணிக்கையிலும் வரப்பு ஓரங்களிலும், நடுவிலும் வைக்க வேண்டும். இதன் மூலம் பூச்சி,புழு தாக்குதல்களை இயற்கையான முறையில் கட்டுப்படுத்தலாம். மகசூலும் அதிகரிக்கும் என்றனர்.

**கொய்மலருக்கு போதிய விலை இல்லை: விவசாயிகள் வருத்தம்**

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு உரிய விலை கிடைக்காததால் மாற்று தொழிலாக கொய்மலர் சாகுபடி மேற்கொள்ள வேண்டுமென அரசு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு விவசாயிகளிடம் வலியுறுத்தியதுடன் வங்கி கடன் மூலம் பசுமை குடில் அமைத்து விவசாயிகளை ஊக்கப்படுத்தியது. அதன்பேரில் பெரும்பாலான விவசாயிகள் கொய்மலர் சாகுபடியில் கூடுதல் லாபம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் தங்களுடைய விலை நிலங்களில் கொய்மலர் சாகுபடியை மேற்கொண்டனர்.ஆனால், எதிர்பார்த்தது போல் பலன் கிடைக்காததால் பெரும்பாலான விவசாயிகள் தற்போது கடனாளிகளாக மாறியுள்ளனர். லில்லியம், ஜெர்பரா, ஆந்தோரியம், பெட்பாரடைஸ், கார்னேசன் உள்ளிட்ட கொய்மலர்கள் சாகுபடியில் பெரும்பாலான விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். ஹாலந்து நாட்டில் இருந்து கொய்மலர் சாகுபடிக்காக ஒரு விதை ரூ.22 வரை செலவு செய்து இறக்குமதி செய்து அதனை முறையாக பதப்படுத்தி நடவு செய்து உற்பத்தியை மேற்கொண்டாலும் எதிர்பார்த்தார் போல் விதை கிடைக்காததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து கொய்மலர் விவசாயிகள் கூறுகையில்: விளை நிலங்களில் பசுமை குடில்கள் அமைத்து வெளி நாட்டில் இருந்து தருவிக்கப்படும் விதைகளை நடவு செய்து விவசாயத்தை மேற்கொண்டு வந்தாலும் ஒரு சில விவசாயிகள் 3 மலர்களுடன் கொய்மலர்களை தரமற்ற விலையில் விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது. 5 முதல் 6 மலர்கள் வரை பூக்கும் தன்மையுள்ள கொய்மலர்கள் மட்டுமே தரமான மலர்கள் என வர்த்தகர்கள் உறுதியளித்துள்ள நிலையில் ஒருசிலர் மேற்கொள்ளும் நடவடிக்கையால் அனைத்து தரப்பினரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். கொய்மலர்களை சந்தைப்படுத்த ஊட்டியில் துவங்கப்பட்ட ஏல மையம் பயன்பாடின்றி உள்ளதால் பெரும்பாலான வியாபாரிகள் நேரடியாக விலை நிலங்களுக்கு குறைந்த விலையில் விவசாயிகளிடம் இருந்து கொய்மலர்களை கொள்முதல் செய்கின்றன. இதனால்

இம்மாவட்டத்தில் உற்பத்தியாகும் கொய்மலர்களை முறையாக சந்தைப்படுத்தி விற்பனை செய்ய இயலாததால் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். எனவே மாவட்ட நிர்வாகம் இதுதொடர்பாக ஆய்வு செய்து கொய்மலர் விவசாயத்தை மேம்படுத்த வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

**ஈரோடு மாவட்டத்தில் போதிய உர வகைகள் கையிருப்பு**

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வரும் நிலையில் ஏற்கனவே நெல், மஞ்சள், கரும்பு போன்ற பயிர்களின் சாகுபடி தீவிரமாக நடந்து வருகிறது. கடந்த ஆண்டுகளில் மாவட்டத்தில் யூரியா, டிஏபி போன்ற உரங்களின் தட்டுபாடு இருந்து வந்தது. தற்போது போதிய மழை பெய்துள்ள நிலையில் உரத்தட்டுபாடு இல்லாமல் தேவையான அளவிற்கு இருப்பு வைத்திருப்பதாக வேளாண்துறையின் தெரிவித்தனர். இதுகுறித்து வேளாண் தரக்கட்டுப்பாட்டு உதவி இயக்குநர் சண்முகசுந்தரம் கூறியதாவது; சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ளதால் தட்டுபாடு இன்றி உரம் விநியோகம் செய்வதற்காக போதிய அளவில் உரவகைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. யூரியா 6200 டன், டிஏபி உரம் 3100 டன், பொட்டாஷ் 3200 டன், காம்ப்ளக்ஸ் உரங்கள் 3750 டன் என போதிய அளவில் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதுதவிர இரு தினங்களுக்கு முன்பு வடமாநிலங்களில் இருந்து 6 ஆயிரம் டன் உரம் ரயில் மூலமாக வந்துள்ளது. இவற்றை தேவைப்படும் அளவிற்கு அந்தந்த பகுதியில் உள்ள வேளாண்மை கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு அனுப்பியும், வேளாண் விரிவாக்க மையங்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. முந்தைய ஆண்டுகளில் யூரியாவிற்கு தட்டுபாடு ஏற்பட்டு அதன் விலையில் பெருமளவிற்கு உயர்ந்து காணப்பட்டது. தற்போது தட்டுபாடு குறைந்து போதுமான அளவிற்கு இருப்பு வைக்கப்பட்டுள்ளதால் விலையும் கட்டுபாட்டில் உள்ளது. பூச்சிகொல்லி மற்றும் களைக்கொல்லிகள் கேன், பாட்டிலில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதை பிரித்து சில்லரையாக விற்பனை செய்யக்கூடாது என இடுபொருள் விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு சில்லரையாகவும், தரம் குறைந்த பூச்சிகொல்லி மருந்துகளையும் விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். சமீபத்தில் நம்பியூரில் தரக்குறைவான

பூச்சிமருந்து விற்பனை செய்த நிறுவனத்தின் மீது வழக்கு தொடரப்பட்ட ரூ.40 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.
இதேபோல ஈரோட்டிலும் ரூ.30 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. விதிமுறைகளை மீறி செயல்படும் இடுபொருள் விற்பனையாளர்கள் மீத பூச்சிமருந்து விற்பனை சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## தமிழக மழை வெள்ள சேதங்களை பார்வையிட வந்த மத்திய குழுவினருடன் ஜெயலலிதா ஆலோசனை



***பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளிலும் சேதத்தை துல்லியமாக ஆய்வு செய்ய வேண்டுகோள்***

“தமிழக வெள்ள சேதத்தை துல்லிய மாக ஆய்வு செய்து அறிக்கை அளியுங்கள்” என மத்திய குழுவின ருக்கு முதல்வர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்தார்.
தமிழகத்தில் தொடர் கனமழை யால் கடலோர மாவட்டங்களான கடலூர், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன.
இந்நிலையில், கடந்த 23-ம் தேதி, மத்திய நிதி மற்றும் மத்திய குழுவை அனுப்பக்கோரி முதல்வர் ஜெயலலிதா பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதினார்.

அன்றே, மத்திய அரசு முதல்கட்டமாக 939 கோடியே 63 லட்சம் ரூபாயை ஒதுக்கியது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு மத்திய உள்துறை இணைச் செயலர் டி.வி.எஸ்.என்.பிரசாத் தலைமையில் 8 பேர் கொண்ட மத்திய குழுவினர் சென்னை வந்தனர். நேற்று காலை தலைமைச் செயலகத்துக்கு வந்த அவர்கள், முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

இது தொடர்பாக , தமிழக அரசு நேற்று வெளி யிட்ட செய்திக்குறிப்பில் கூறி யிருப்பதாவது:

முதல்வரை மத்திய குழு வினர் சந்தித்தபோது, ஓ.பன்னீர் செல்வம் உள்ளிட்ட அமைச்சர்கள், தலைமைச் செயலர் கு.ஞான தேசிகன், பல்வேறு துறைகளின் செயலர்களும் பங்கேற்றனர்.

அப்போது மத்திய குழுவினரிடம் முதல்வர் ஜெயலலிதா கூறிய தாவது:

பெரு மழையால் தமிழக வட கடலோர மாவட்டங்களான கடலூர், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பெரும் சேதம் ஏற்பட்டது. அமைச்சர்கள், அதிகாரிகள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

உடனடி நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டது. தொடர்ந்து, வெள்ள நிவாரணம் மற்றும் சீரமைப் புப் பணிகளுக்கு ரூ.8 ஆயிரத்து 481 கோடி தேவைப்படுவதாக வும், உடனடியாக ரூ.2 ஆயிரம் கோடி வழங்குமாறும், மத்திய குழுவை அனுப்புமாறும் கேட்டு கடந்த 23-ம் தேதி பிரதமருக்கு கடிதம் எழுதினேன்.

தற்போது மத்திய குழுவை அனுப்பியதற்கு பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்கள் மழையால் பாதிக்கப் பட்ட குடியிருப்புகள், பயிர்கள், சாலைகளை பார்வையிடுவதுடன், தமிழக அரசு எடுத்துள்ள நட வடிக்கைகளையும் அறிந்து கொள்ளுங்கள்.

தமிழக சேதத்துக்கு, மாநில நிதி ஆதாரங்களை தாண்டி அதிகளவில் நிதி தேவைப்படுகிறது. எனவே, பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளையும் துல்லியமாக ஆய்வு செய்து, மத்திய உள்துறை அமைச்சகத்தில் விரைவாக

அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அப்போதுதான் மத்திய அரசு நிவாரணத்தை காலதாமதமின்றி விடுவிக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது மத்திய உள்துறை இணைச் செயலர் பிரசாத், தமிழக அரசின் வெள்ள சேத அறிக்கையை படித்ததாகவும், வெள்ள பாதிப்பு பகுதிகளை நேரில் பார்வையிட்டு, மத்திய அரசுக்கு விரைந்து அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**ஆலோசனை**

தொடர்ந்து, காலை 11.50 மணிக்கு தலைமைச் செயலக கூட்ட அரங்கில், தமிழக தலைமைச் செயலர் கு.ஞானதேசிகனுடன், மத்திய குழுவினர் ஆலோசனை நடத்தினர். இதில், நிதி, வருவாய், சுகாதாரம் உள்ளிட்ட துறைகளின் செயலர்கள், அதுல்ய மிஸ்ரா (வருவாய் நிர்வாக ஆணையர்), சென்னை மாநகராட்சி ஆணையர் விக்ரம்கபூர், வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் ஆகியோர் பங்கேற்றனர்.

பிற்பகல் 1.15 மணிக்கு கூட்டம் முடிந்தது, மாலை 3 மணிக்கு, காஞ்சி புரம் மாவட்டம் தாம்பரம், முடிச்சூர் பகுதிகளை பார்வையிட, மத்திய குழுவினர் புறப்பட்டுச் சென்றனர்.

**மத்திய குழுவில் யார்?**

மத்திய உள்துறை இணை செயலர் டி.வி.எஸ்.என்.பிரசாத் தலைமையிலான இக்குழுவில், மத்திய அரசின் வேளாண்துறை கூடுதல் ஆணையர் ஒய்.ஆர்.மீனா, நிதித்துறை இணை இயக்குநர் எம்.எம்.சச்தேவா, குடிநீர் துறை முதுநிலை ஆலோசகர் ஜி.ஆர்.ஜார்கர், குடிநீர் துறை முதுநிலை மண்டல இயக்குநர் ஆர்.ரோஷினி, எரிசக்தித்துறை உதவி இயக்குநர் சுமித் கோயல், ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் பி.சி.பெஹரா, நீர்வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் என்.எம்.கிருஷ்ணன் உன்னி, சாலை போக்குவரத்துத் துறை மண்டல இயக்குநர் டி.எஸ்.அரவிந்த் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

**இன்று கடலூரில் ஆய்வு**

நேற்று காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம், முடிச்சூர் மற்றும் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட வேளச்சேரி, சைதாப்பேட்டை பகுதி களை ஆய்வு

செய்த மத்தியக் குழுவினர், இன்று கடலூரில் வெள் ளச் சேதத்தை ஆய்வு செய்கின்ற னர். தொடர்ந்து நாளை, சென்னை திருவொற்றியூர் உள்ளிட்ட வட சென்னை பகுதிகள், திருவள்ளூர் மாவட்டத்தில் அம்பத்தூர், ஆவடி உள்ளிட்ட பகுதிகளை ஆய்வு செய்கின்றனர்.

கனமழை காரணமாக சென்னையில் காய்கறிகள் விலை கடும் உயர்வு

| கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை நேற்றைய நிலவரம் | | கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை நேற்றைய நிலவரம் | |
|---|---|---|---|
| காய்கறி பெயர் | 1 கிலோ ரூபாயில் | பாகற்காய் | 50 |
| தக்காளி | 60(30) | பீர்க்கங்காய் | 70 |
| பெரிய வெங்காயம் | 40 | புடலங்காய் | 60(20) |
| சாம்பார் வெங்காயம் | 60 | சுரைக்காய் | 50(30) |
| உருளைக் கிழங்கு | 18 | இஞ்சி(புதியது) | 40 |
| கத்தரிக்காய் | 80 | இஞ்சி(பழையது) | 90 |
| பீன்ஸ் | 100(80) | கொத்தமல்லி கட்டு | 60(40) |
| கேரட் | 50(30) | சேனைக் கிழங்கு | 30 |
| பீட்ரூட் | 25(15) | சேப்பங்கிழங்கு | 25 |
| முட்டைக்கோஸ் | 25(15) | காலிபிளவர் | 40(30) |
| அவரைக்காய் | 80(30) | உள்ளூர் முருங்கைக்காய் | 80(40) |
| வெண்டைக்காய் | 60(15) | பாம்பே முருங்கை | 100 |
| கொத்தவரங்காய் | 60(15) | | |

* 15 நாட்களுக்கு முன்பு இருந்த விலை நிலவரம் அடைப்புக் குறிக்குள்

தமிழகத்தில் பெய்து வரும் வட கிழக்கு பருவ மழை காரணமாக சென்னையில் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. சில காய்களின் விலை 3 மடங்குவரை அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் பலத்த மழையால் சென்னைக்கு காய்கறிகள் வருவது குறைந்துள்ளது. இதனால் கோயம்பேடு மார்க்கெட் மற்றும் சில்லறை கடைகளில் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதுள்ளது. பருவ மழைக்கு முன்பு கிலோ ரூ.20-க்கு விற்பனையான கத்தரிக்காய் நேற்று ரூ.80க்கு விற்கப்பட்டது. முருங்கைக்காய் ரூ.80க்கும், தக்காளி ரூ.60க்கும், வெண்டைக்காய் ரூ.60க்கும், புடலங்காய் ரூ.60க்கும்

விற்பனையானது. மேலும் பல காய்கறிகளின் விலையும் உச்சத்தை தொட்டது. இதன் காரணமாக சாதாரண மக்கள் பாதிக்கப்பட்டனர்.

காய்கறிகளின் விலையேற்றம் அடுத்த 20 நாட்கள்வரை இதே நிலையில் நீடிக்கும் அல்லது அவற்றின் விலை மேலும் அதிகரிக்கும் என்று கோயம்பேடு மார்க்கெட் அனைத்து மொத்த வியாபாரிகள் சங்க ஆலோசகர் வி.ஆர்.சவுந்தரராஜன் தெரிவித்தார்.

சென்னைக்கு அதிக அளவிலான காய்கறிகள் திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களிலிருந்து வருகிறது. இந்த மாவட்டங்களில் கடும் மழையால் விளை நிலங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. மழை நீர் முழுவதும் வடிந்து பூமி காய்ந்த பிறகே காய்கறி அறுவடை முழுமையாக தொடங்கும் அதுவரை இந்த விலையேற்றம் நீடிக்கும் என வியாபாரிகள் கூறுகின்றனர்.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## சிற்றாரில் 10 செ.மீ. மழை: அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு



நாகர்கோவில், நவ. 27–

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வந்த மழை சற்று குறைந்திருந்தது.

கடலோர மாவட்டங்களில் இன்று (27–ந்தேதி), 28–ந்தேதிகளில் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை மையம் அறிவித்திருந்தது. இதையடுத்து முன்னேற்பாடு பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று மாலை பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு அணை பகுதிகளில் வானத்தில் கருமேகங்கள் திரண்டு காணப்பட்டது. திடீரென பலத்த மழை கொட்டி தீர்த்தது. சிற்றாறு–2–ல் அதிகபட்சமாக 101.6 மி.மி. மழை பதிவானது.

சிற்றாறு–2 அணை பகுதிகளில் சுமார் 2 மணி நேரம் கொட்டி தீர்த்த கனமழையினால் அந்த பகுதி முழுவதும் வெள்ளக்காடானது. சிற்றாறு அணைகளுக்கு வரக்கூடிய நீர்வரத்தும் அதிகரித்தது. இதனால் அணைகளின் நீர்மட்டம் உயரத் தொடங்கியது.

கோதையாறு, குலசேகரம், திற்பரப்பு பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது. மலையோர பகுதியான பாலமோர் பகுதியிலும் பெய்த மழையினால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளுக்கு வரக்கூடிய நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணையை பொதுப்பணித்துறை அதிகாரிகள் 24 மணி நேரமும் கண்காணித்து வருகிறார்கள்.

பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் இன்று காலை 45.59 அடியாக இருந்தது. அணைக்கு 612 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 593 கனஅடி தண்ணீர் உபரிநீர் வெளியேற்றப்படுகிறது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 74.15 அடியாக இருந்தது. அணைக்கு 373 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 305 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

சிற்றாறு–1 அணையின் நீர்மட்டம் 16.24 அடியாக உள்ளது. அணைக்கு 173 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. சிற்றாறு–2 அணையின் நீர் மட்டம் 16.33 அடியாக உள்ளது. அணைக்கு 246 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

பேச்சிப்பாறை அணையில் இருந்து திறந்து விடப்பட்டுள்ள உபரிநீரால் கோதையாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. திற்பரப்பு அருவியிலும் வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. சுற்றுலா பயணிகள் குளிக்க தடை

நீடிக்கிறது. அருவி பகுதியில் மிதமான மழை பெய்து வருவதால் அங்கு ரம்மியமான சூழல் நிலவுகிறது.

மாவட்டம் முழுவதும் பெய்த மழை அளவு மி.மீ. வருமாறு:–

பேச்சிப்பாறை–10.4, பெருஞ்சாணி–33.2, சிற்றாறு–1–85.2, சிற்றாறு–2– 101.6, பூதப்பாண்டி–4.8, சுருளோடு–16, கன்னிமார்–5.2, புத்தன் அணை–34.4.

## வரத்து குறைவால் காய்கறிகள் விலை உயர்வு: முருங்கைக்காய் விலை கிலோ ரூ.100-ஐ தொட்டது



சென்னை, நவ.27-

தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழையால் காய்கறிகள் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் காய்கறிகள் வரத்து குறைந்து, அதன் விலை கிடு கிடுவென உயர்ந்து வருகிறது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் இந்த மாதம் தொடக்கத்தில் இருந்தே இந்த விலை ஏற்றம் காணப்பட்டு வருகிறது. மக்களின் அன்றாட தேவைகளுக்கு பயன்படுத்தும் காய்கறிகளான தக்காளி, கத்தரிக்காய், வெண்டைக்காய், பீட்ரூட், பீன்ஸ், அவரைக்காய், முருங்கைக்காய் ஆகியவற்றின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து காணப்படுகிறது. அதிலும் முருங்கைக்காய் விலை மற்ற காய்கறிகளின் விலையை விட உச்சத்தில் இருக்கிறது. இதுகுறித்து சென்னை கோயம்பேடு வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்தரராஜன் கூறியதாவது:-

இந்த மாதம் தொடக்கத்தில் இருந்தே தமிழகத்தில் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் காய்கறிகள் விளைச்சல் பாதிக்கப்பட்டு, வரத்து குறைந்து,

அதன் விலை அதிகரித்துள்ளது. கடந்த வாரத்தில் அதிகரித்து காணப்பட்ட தக்காளி விலை, கொஞ்சம் குறைந்துள்ளது. அதை தவிர, கத்தரிக்காய், பீன்ஸ், அவரைக்காய், கேரட், பீட்ரூட், வெண்டைக்காய், புடலங்காய், பாகற்காய், கொத்தவரங்காய், காலிபிளவர் போன்ற காய்கறிகளின் விலை உயர்ந்தே காணப்படுகிறது. யாரும் எதிர்பாராத வகையில் முருங்கைக்காய் விலை கிலோ ரூ.100-ஐ தொட்டு விட்டது. நாளொன்றுக்கு 25 லாரிகளில் விற்பனைக்கு கொண்டு வரப்படும் முருங்கைக்காய், தற்போது 5 லாரிகளில் தான் வருகிறது. தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா ஆகிய பகுதிகளில் முற்றிலும் விளைச்சல் இல்லை. மும்பையில் இருந்து மட்டுமே விற்பனைக்கு வருகிறது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தினமும் 320 முதல் 340 லாரிகளில் காய்கறிகள் விற்பனைக்காக கொண்டு வரப்படும். வடகிழக்கு பருவமழையால் காய்கறிகள் வரத்து குறைந்து, 230 முதல் 240 லாரிகளில் காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இதே நிலை இன்னும் ஒரு வாரத்துக்கு நீடிக்கும். அடுத்த மாதம் முதல் வாரத்தில் இருந்து காய்கறிகள் விலை குறைவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**மேலடுக்கு சுழற்சி இன்று குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறும் கடலோர மாவட்டங்களில் நாளை மிக கனமழை பெய்யும் வானிலை மையம் அறிவிப்பு**




சென்னை

தெற்கு அந்தமான் பகுதியில் உள்ள மேலடுக்கு சுழற்சி இன்று(வெள்ளிக்கிழமை) குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறும். இதன் காரணமாக இன்று டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், நாளை (சனிக்கிழமை) கடலோர மாவட்டங்களில் பல இடங்களிலும் மிக கனமழையும் பெய்யும் என்று வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடகிழக்கு பருவமழை

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. தமிழ்நாட்டில் சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக இந்த மாவட்டங்களில் உள்ள ஏராளமான வீடுகளை மழை வெள்ளம் சூழ்ந்தது. இப்போது அந்த வெள்ளம் வடிந்து வருகிறது. தமிழ்நாட்டில் அக்டோபர் மாதம் 1-ந்தேதி முதல் டிசம்பர் 31-ந்தேதி வரை வடகிழக்கு பருவமழை காலம். அந்த 3 மாதம் பெய்ய வேண்டிய சராசரி மழையின் அளவை இப்போது பெய்தமழை தாண்டி விட்டது. இன்றைய வானிலை குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரிகள் கூறியதாவது:-

நாளை மிக கனமழை

தெற்கு அந்தமான் மற்றும் தென் கிழக்கு வங்கக்கடல் பகுதியில் மேலடுக்கு சுழற்சி நிலவி வருகிறது. அது குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலையாக (நேற்று) மாறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மாறவில்லை. அப்படியே இருக்கிறது.

அது குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக அடுத்த 24 மணி நேரத்திற்குள் மாறும்.

இதன் காரணமாக தமிழ்நாட்டில் இன்று (வெள்ளிக்கிழமை) சில இடங்களில் மழை பெய்யும். டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும். நாளை(சனிக்கிழமை) கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களில் மழை பெய்யும். பல இடங்களில் மிக கனமழை பெய்யும். செய்யூரில் 7 செ.மீ. மழை

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் காஞ்சீபுரம் மாவட்டம் செய்யூரில் 7 செ.மீ., விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் 5 செ.மீ., காஞ்சீபுரம் மாவட்டம் மகாபலிபுரத்தில் 4 செ.மீ., கேளம்பாக்கம், செங்கல்பட்டு தலா 1 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தொடர் மழை எதிரொலி: தமிழகத்தில் 8 அணைகள் 90 சதவீதம் நிரம்பின கனமழையால் கூவம் ஆறு சுத்தமானது



சென்னை,

தொடர் மழை எதிரொலியாக தமிழகத்தில் உள்ள 8 அணைகளில் 90 சதவீதம் தண்ணீர் நிரம்பி உள்ளன. சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளின் நீர்மட்டம்

தொடர்ந்து உயர்ந்து வருவதுடன், தொடர் மழையால் கூவம் ஆறும் சுத்தமாகி உள்ளது.

அணைகளின் நீர்மட்டம்

வடகிழக்கு பருவமழை காரணமாக தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது. இதனால் தமிழகத்தின் குடிநீர் ஆதாரங்களாக உள்ள அணைகள் மற்றும் ஏரிகளின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. தமிழகத்தில் உள்ள முக்கியமான 15 அணைகளில் பெரும்பாலான அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து அணை நிரம்பு நிலையை எட்டி வருகிறது. அதேபோல் சென்னையின் குடிநீருக்கான ஆதாரமான ஏரிகளின் நீர் மட்டமும் உயர்ந்து வருகிறது. இதனால் சென்னை மாநகரின் குடிநீர் தேவைக்கும் போதுமான தண்ணீர் வந்துள்ளது.

கூவம் நிரம்பி ஓடுகிறது

சென்னை மாநகரில் பெய்த கனமழை தண்ணீர் கால்வாய்கள் மூலம் கூவம், அடையாறு மற்றும் பக்கிங்காம் கால்வாய்களில் சென்று கடலை சேருகிறது. இதில் பெரும்பாலான இடங்களில் கூவம் ஆறு முழு கொள்ளளவுடன் நிரம்பி ஓடுகிறது. கனமழையால் கூவத்தில் இருந்த கழிவு பொருட்களும் அடித்து செல்லப்பட்டு கூவம் ஆறும் தற்போது நாற்றம் எதுவும் இல்லாமல் மழைநீரால் சுத்தமாக்கப்பட்டு உள்ளது. கூவம் கரைகளில் வசிப்பவர்களும் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

கடந்த ஆண்டை விட உயர்வு

இதுகுறித்து பொதுப்பணி துறை மற்றும் குடிநீர் வாரிய அதிகாரிகள் கூறியதாவது:-

தமிழகத்தில் உள்ள அணைகளில் குடிநீர் மற்றும் விவசாயத்துக்காக தண்ணீர் சேமிக்கப்படுகிறது. தற்போது பெய்து வரும் கனமழையால் பெரும்பாலான அணைகள் மற்றும் சென்னைக்கு குடிநீர் சப்ளை செய்யும் பூண்டி, சோழவரம், புழல், செம்பரம்பாக்கம் ஆகிய 4 ஏரிகளிலும் நீர் மட்டம் எதிர்பார்த்ததை விட அதிகளவு தேங்கி உள்ளது. குறிப்பாக பூண்டி 81.31 சதவீதமும், சோழவரம் 75.82 சதவீதமும், புழல் 85.61 சதவீதமும், செம்பரம்பாக்கம் 85.15 சதவீதமும், வீராணம் 39.11 சதவீதமும் தண்ணீர் இருப்பு உள்ளது. ஏரிகளில் கடந்த

ஆண்டுகளை ஒப்பிடுகையில் 3 முதல் 5 மடங்கு வரை தண்ணீர் தேங்கி உள்ளது.

8 அணைகள் நிரம்பும் நிலை

அதேபோல் பெரிய அணைகளை பொறுத்த வரையில் அமராவதி, வைகை, பாபநாசம், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, கிருஷ்ணகிரி, சாத்தனூர், ஆழியாறு ஆகிய 8 அணைகள் சராசரியாக 90 சதவீதம் நிரம்பி உள்ளன. இந்த அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் ஓரிரு நாட்கள் கனமழை பெய்தால் விரைவில் நிரம்பும் நிலையை எட்டி உள்ளன. மீதம் உள்ள மேட்டூர், பவானிசாகர், பெரியார், மணிமுத்தாறு, சோலையாறு, பரம்பிக்குளம், திருமூர்த்தி ஆகிய 7 அணைகளிலும் 60 முதல் 70 சதவீதம் தண்ணீர் நிரம்பி உள்ளன. அணைகளில் நீர்மட்டம் உயருவதை தீவிரமாக கண்காணித்து வருகிறோம். கனமழை தொடர்ந்து பெய்யும் என எதிர்பார்க் கப்படுவதால், அணைகள் மற்றும் ஏரியின் நீர்வரத்து மேலும் உயரக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அதி காரிகள் கூறினர்.

## வரத்து குறைவால் காய்கறிகள் விலை தொடர்ந்து விலை ஏற்றம்: முருங்கைக்காய் விலை கிலோ ரூ.100-ஐ தொட்டது இன்னும் ஒரு வாரத்துக்கு இதே நிலை நீடிக்கும் என வியாபாரிகள் தகவல்



சென்னை

முருங்கைக்காய் விலை கிலோ ரூ.100-ஐ தொட்டது. வரத்து குறைவால்

காய்கறிகள் விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே செல்கிறது. இன்னும் ஒரு வாரத்துக்கு இதே நிலை நீடிக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

விலை ஏற்றம்

தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழையால் காய்கறிகள் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் காய்கறிகள் வரத்து குறைந்து, அதன் விலை கிடு கிடுவென உயர்ந்து வருகிறது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் இந்த மாதம் தொடக்கத்தில் இருந்தே இந்த விலை ஏற்றம் காணப்பட்டு வருகிறது. மக்களின் அன்றாட தேவைகளுக்கு பயன்படுத்தும் காய்கறிகளான தக்காளி, கத்தரிக்காய், வெண்டைக்காய், பீட்ரூட், பீன்ஸ், அவரைக்காய், முருங்கைக்காய் ஆகியவற்றின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து காணப்படுகிறது. அதிலும் முருங்கைக்காய் விலை மற்ற காய்கறிகளின் விலையை விட உச்சத்தில் இருக்கிறது. இதுகுறித்து சென்னை கோயம்பேடு வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்தரராஜன் கூறியதாவது:-

முருங்கைக்காய் விலை ரூ.100

இந்த மாதம் தொடக்கத்தில் இருந்தே தமிழகத்தில் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் காய்கறிகள் விளைச்சல் பாதிக்கப்பட்டு, வரத்து குறைந்து, அதன் விலை அதிகரித்துள்ளது. கடந்த வாரத்தில் அதிகரித்து காணப்பட்ட தக்காளி விலை, கொஞ்சம் குறைந்துள்ளது.

அதை தவிர, கத்தரிக்காய், பீன்ஸ், அவரைக்காய், கேரட், பீட்ரூட், வெண்டைக்காய், புடலங்காய், பாகற்காய், கொத்தவரங்காய், காலிபிளவர் போன்ற காய்கறிகளின் விலை உயர்ந்தே காணப்படுகிறது. யாரும் எதிர்பாராத வகையில் முருங்கைக்காய் விலை கிலோ ரூ.100-ஐ தொட்டு விட்டது. நாளொன்றுக்கு 25 லாரிகளில் விற்பனைக்கு கொண்டு வரப்படும் முருங்கைக்காய், தற்போது 5 லாரிகளில் தான் வருகிறது. தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா ஆகிய பகுதிகளில் முற்றிலும் விளைச்சல் இல்லை. மும்பையில் இருந்து மட்டுமே விற்பனைக்கு வருகிறது.

காய்கறிகள் வரத்து குறைவு

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தினமும் 320 முதல் 340 லாரிகளில் காய்கறிகள் விற்பனைக்காக கொண்டு வரப்படும். வடகிழக்கு பருவமழையால் காய்கறிகள் வரத்து குறைந்து, 230 முதல் 240 லாரிகளில் காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இதே நிலை இன்னும் ஒரு வாரத்துக்கு நீடிக்கும். அடுத்த மாதம் முதல் வாரத்தில் இருந்து காய்கறிகள் விலை குறைவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார். சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:-

விலை நிலவரம்

தக்காளி - ரூ.50, பல்லாரி - ரூ.30 முதல் ரூ.40 வரை, பீன்ஸ் - ரூ.80, கேரட் - ரூ.40, நூக்கல் - ரூ.30, சவ்சவ் - ரூ.30, பீட்ரூட் - ரூ.30, முட்டைக்கோஸ் - ரூ.25, உருளைக்கிழங்கு - ரூ.20, மிளகாய் - ரூ.20, இஞ்சி - ரூ.50 முதல் ரூ.90 வரை, சேப்பங்கிழங்கு - ரூ.20, சேனைக்கிழங்கு - ரூ.25, கத்தரிக்காய் - ரூ.25, அவரைக்காய் - ரூ.80, கொத்தவரங்காய் - ரூ.40, பாகற்காய் - ரூ.45, காலிபிளவர் - ரூ.35, முள்ளங்கி - ரூ.25, புடலங்காய் - ரூ.40, முருங்கைக்காய் - ரூ.100, வெண்டைக்காய் - ரூ.45 முதல் ரூ.60 வரை, பச்சைப்பட்டாணி - ரூ.140, சுரைக்காய் - ரூ.25, தேங்காய் (காய் ஒன்று) - ரூ.15 முதல் ரூ.20 வரை, வாழைக்காய் (காய் ஒன்று) - ரூ.6.

## பேரீச்சையின் பிரமாத நன்மைகள்



உலகத்துக்கு அரபு உலகம் தந்த அரிய கொடை, பேரீச்சம்பழம். இது, சத்துகள் நிறைந்த ஒரு பெட்டகமாகவே திகழ்கிறது. குறிப்பாக, இரும்புச்சத்து

நிறைந்திருப்பதால் பேரீச்சம்பழம் பெண்களுக்கு மிகவும் முக்கியமானது. பேரீச்சம்பழத்தை அன்றாடம் சாப்பிடும்போது அது அள்ளித்தரும் நன்மைகள் பற்றிப் பார்ப்போம்... பேரீச்சம்பழத்தில் கால்சியம், மாங்கனீஸ், தாமிரம், மெக்னீசியம் போன்ற அத்தியாவசிய தாதுக்கள், இரும்புச்சத்து, வைட்டமின் ஏ, பி, பி2, பி5 மற்றும் வைட்டமின் ஈ சத்துகள் நிறைந்துள்ளன.

குளுக்கோஸ், பிரக்டோஸ், சுக்ரோஸ் போன்றவை பேரீச்சம்பழத்தில் அதிகம் இருக்கின்றன. அதனால் தினமும் பேரீச்சம்பழம் உட்கொண்டால் உடல் வலிமையும், சக்தியும் பெருமளவில் அதிகரிக்கும். உடல் எடையை அதிகரிக்க தினமும் பேரீச்சம்பழம் சாப்பிடலாம். இதில் இருக்கும் வைட்டமின், புரதம் போன்றவை உடல் எடையை அதிகரிக்க உதவுகின்றன. பேரீச்சம்பழத்தில் இருக்கும் தாதுக்கள் எலும்பின் வலிமையை அதிகரிக்கின்றன. எலும்பு தேய்மானம், எலும்பு சார்ந்த பிரச்சினை உள்ளவர்கள் தினசரி பேரீச்சம்பழம் சாப்பிடலாம்.

பேரீச்சம்பழத்தில் செலினியம், தாமிரம் போன்ற சத்துகளும் இருக்கின்றன. இவை எலும்புகளின் வலிமையை அதிகரிக்க உதவுகின்றன. தினமும் பேரீச்சம்பழம் சாப்பிட்டு வந்தால் செரிமானப் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். இதில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. இது செரிமானப் பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கிறது, குடலியக்கத்தையும் சீர் செய்கிறது. பேரீச்சம்பழத்தில் வைட்டமின் ஏ, பி போன்றவை அதிகம் உள்ளன. இவை, சருமத்தின் தன்மையை மிருதுவாக்குகின்றன, சுருக்கங்களைப் போக்கவும், கோடுகள் மறையவும் உதவுகின்றன.

பேரீச்சம்பழத்தில் இருக்கும் பொட்டாசியம், மெக்னீசியம் போன்றவை ரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள உதவுகின்றன.

இதில் உள்ள இரும்புச்சத்து, வைட்டமின் சி, பி 6 போன்றவை ரத்தத்தில் இருக்கும் ஹீமோகுளோபின் அளவை சீராக்க உதவுகின்றன. இதனால் ரத்தசோகை பிரச்சினைக்கு நல்ல தீர்வு காண முடியும்
உலர்ந்த பேரீச்சம்பழங்கள் அப்படியே உண்ண ஏற்றவை. வாதாம்பருப்பு, பாதாம்பருப்பு, பாலாடைக்கட்டி ஆகியவற்றுடன் பேரீச்சையைச் சேர்த்து

ஆவியில் வேகவைத்தும் சாப்பிடலாம். பழ சாலட்டுகளில் பேரீச்சைத் துண்டுகளைச் சேர்த்தால் சுவை கூடும்.

பேரீச்சை ஜூஸ் உடலுக்கு நல்ல சக்தி அளிக்கக்கூடியது. பேரீச்சம்பழம், பதப்படுத்திய திராட்சை மற்றும் பன்னீருடன் சேர்த்து பேரீச்சைச் சாறு தயாரித்து சத்துபானமாக அருந்தலாம்.

சுவையோடு சத்து அளிக்கக்கூடிய உணவுப்பொருட்களில் பேரீச்சை முக்கியமானது. அதை நமது அன்றாட வாழ்வில் சேர்த்துக்கொள்வதன் மூலம் ஆரோக்கியம் காக்கலாம்!

### கற்றாழையின் மருத்துவ குணங்கள்



காட்டுத் தாவரமாக வளர்ந்துகிடக்கும் கற்றாழையில் எண்ணற்ற மருத்துவ குணங்கள் உள்ளன. உலகம் முழுவதும் அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பில் கற்றாழைக்கு முக்கிய இடம் உண்டு. கற்றாழையில் உடலுக்குத் தேவையான அத்தியாவசிய எட்டு அமினோ அமிலங்களுடன், கால்சியம், பொட்டாசியம், இரும்புச்சத்து போன்றவையும் நிறைந்துள்ளன. வெயில் காலங்களில் அடிக்கடி கற்றாழையின் சதைப் பகுதியைப் பயன்படுத்தி முகம், கை, கால்களைக் கழுவினால், சூரிய ஒளியில் இருந்து தோலைப் பாதுகாக்கும்.

கற்றாழை சதைப் பகுதியுடன் தேன் சேர்த்து வாரத்துக்கு ஒருமுறை முகத்தில் தடவி, 15 நிமிடங்கள் கழித்துக் கழுவினால், முகம் பொலிவடையும்.

கரும்புள்ளிகள், சுருக்கங்கள், முகப்பருவால் ஏற்படும் அழற்சிகள் நீங்கும். கற்றாழையின் சதைப்பகுதியை தண்ணீரில் நன்றாகக் கழுவி, உதட்டில் தடவினால் உதடு வறண்டு போகாமல் இருக்கும்.

## தமிழக வெள்ள சேத பகுதிகளில் மத்திய குழுவினர் நேரில் ஆய்வு



சென்னை,

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்துவருகிறது. குறிப்பாக கடந்த 2 வாரங்களாக பெய்த கனமழையின் காரணமாக சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் வெள்ளநீர் ஆறாக பெருக் கெடுத்து ஓடியது.

இயல்பு வாழ்க்கை பாதிப்பு

இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்ததால் அவர்கள் அருகிலுள்ள முகாம்களில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டனர்.

திருவள்ளூர், காஞ்சீபுரம் மாவட்டத்திலுள்ள ஏரிகளும் நிரம்பியதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திறந்து விடப்பட்டன. ஏரிகளில் இருந்து வெளியேற்றப்பட்ட நீர் அடையாறு, கூவம் ஆறு வழியாக கடலில் கலந்ததால்

கரையோரம் வசித்த பொதுமக்கள் குடியிருப்புக் குள்ளும் வெள்ளநீர் புகுந்தது. அவர்களும் பாதுகாப்பாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

பிரதமருக்கு கடிதம்

இந்த சூழ்நிலையில் தமிழகத்தில் வெள்ள சேதங்களை பார்வையிட மத்தியகுழுவை அனுப்பி வைக்க வேண்டும் என்றும், நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிகளுக்கு உடனடியாக ரூ.2 ஆயிரம் கோடி ஒதுக்க வேண்டும் என்றும் கடந்த 23-ந்தேதி முதல்-அமைச்சர் ஜெயலலிதா பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதினார்.அன்றைய தினமே உடனடி நிவாரணமாக ரூ.940 கோடியை மத்திய அரசு வழங்கியது.

மத்திய குழு

இந்த நிலையில் தமிழக வெள்ளச்சேதங்களை பார்வையிட்டு சேத மதிப்புகளை கண்டறிவதற்காக மத்திய அரசின் உள்துறை இணைச்செயலாளர் டி.வி.எஸ்.என்.பிரசாத் தலைமையில் 8 பேர் கொண்ட மத்திய குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவினர் நேற்று முன்தினம் நள்ளிரவில் சென்னை வந்தனர்.

நேற்று காலை 10.40 மணிக்கு சென்னை தலைமைச்செயலகம் வந்த மத்திய குழுவினர், முதல்-அமைச்சர் ஜெயலலிதாவை சந்தித்து பேசினர். தொடர்ந்து தமிழக அரசின் தலைமைச்செயலாளர் கு.ஞானதேசிகனையும் சந்தித்து பேசினர். அப்போது தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ளச்சேதங் கள் குறித்த வீடியோ காட்சிகள் மத்திய குழுவிற்கு போட்டு காண்பிக்கப்பட்டது. மதியம் 1.20 மணியளவில் இந்த ஆலோசனைக் கூட்டம் முடிவடைந்தது.

நேரில் ஆய்வு

அதன் பின்னர் தலைமைச் செயலகத்தில் இருந்து புறப்பட்ட மத்திய குழுவினர் சென்னை அண்ணாசாலையிலுள்ள தாஜ் கிளப் ஹவுஸ் ஹோட்டலில் மதிய உணவு அருந்தினர். பின்னர் சற்று நேரம் அங்கு ஓய்வெடுத்த அவர்கள் மதியம் 3.10 மணிக்கு காஞ்சீபுரம் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளசேதங்களை பார்வையிடுவதற்காக 5 கார்களில் புறப்பட்டனர். அவர்களுடன் தமிழக

அரசின் உயர்அதிகாரிகளும் சென்றனர்.

தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு வெள்ளசேதத்தை பார்வையிட வந்த மத்திய குழுவினரை காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் கஜலட்சுமி பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். தொடர்ந்து அவரும் மத்திய குழுவினருடன் காரில் புறப்பட்டார்.

பொதுமக்கள் கண்ணீர்: முதலாவதாக மேற்கு தாம்பரம் காந்தி ரோட்டில் உள்ள தி மெட்ராஸ் சேவா சதன் மேல்நிலைப்பள்ளியில் உள்ள முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த பொதுமக்களை சந்தித்தனர். அப்போது கடந்த 15 நாட்களாக கனமழையால் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை மத்திய குழுவினரிடம் கண்ணீர் மல்க தெரிவித்தனர். அதை குறிப்பெடுத்துக் கொண்ட மத்திய குழுவினர் பின்னர் அங்கிருந்து முடிச்சூர் ரோடு வழியாக பாப்பன் கால்வாய் பகுதிக்கு வந்து இறங்கினர்.அங்கு தேங்கியிருந்த வெள்ளநீர் தற்போது தான் படிப்படியாக வடிந்துள்ளது. அங்கு சேதமடைந்த பகுதிகளை நேரில் சென்று பார்த்தனர்.

கோரிக்கை

அங்கிருந்த மக்களிடமும் உண்மை நிலையை கேட்டறிந்தனர். தொடர்ந்து சி.டி.ஓ காலனி பகுதிக்கு சென்றனர். அந்த பகுதியில் உள்ள வீடுகளை சுற்றி வெள்ளநீர் தேங்கியிருந்தது. இப்போதுதான் அந்த நீர் ஓடை தோண்டப்பட்டு வடிய வைக்கப்பட்டு வருகிறது. அதை பார்வையிட்ட மத்திய குழுவினர் அங்குள்ள மக்களிடம் விசாரித்தனர். அவர்கள் இந்த பகுதியில் அதிகம் வெள்ளம் பாதித்துள்ளதால் தங்களுக்கு கூடுதல் நிவாரண தொகை வழங்க வேண்டும் என்று மத்திய குழுவிடம் கோரிக்கை வைத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை பதிவு செய்துகொண்ட அவர்கள் பின்னர் அங்கிருந்து தாம்பரம் கிஷ்கிந்தா சந்திப்பில் உள்ள மேம்பாலத்திற்கு வந்தனர். பின்னர் அந்த பாலத்தில் இருந்து கொண்டு தாழ்வான பகுதியில் உள்ள வீடுகளையும், அதை வெள்ளநீர் சூழ்ந்திருப்பதையும் பார்வையிட்டனர்.

மணல் மூட்டை

தொடர்ந்து அங்கிருந்து மேடவாக்கம், சேலையூர் வழியாக வந்த மத்திய குழுவினர் ராஜ கீழ்ப்பாக்கம் ஏரியில் உடைந்த பகுதியை பார்வையிட்டனர். அங்கு உடைப்பு ஏற்பட்ட பகுதியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மணல் மூட்டை பகுதிக்கு சென்று ஆய்வு செய்த அவர்கள் அங்குள்ள பகுதி மக்களிடம் வெள்ள பாதிப்பு குறித்து கேட்டறிந்தனர். தொடர்ந்து அங்கிருந்து கோவிலம்பாக்கம் சென்று வெள்ள சேத பகுதிகளை பார்வையிட்டனர்.

கோவிலம்பாக்கம் பகுதிக்கு வந்த மத்திய குழுவினர் அங்குள்ள நாராயணபுரம் ஏரியை சென்று பார்வையிட்டனர். அந்த ஏரிக்கு வந்துகொண்டிருந்த காட்டாற்று வெள்ளத்தையும் பார்வையிட்டனர். தொடர்ந்து அங்கிருந்து வேளச்சேரி வந்த மத்திய குழுவினர், அங்குள்ள மேம்பாலத்தில் நின்றபடி தாழ்வான பகுதிகளில் உள்ள வெள்ள சேதங்களை பார்வையிட்டு, இரவு 7 மணியளவில் தங்களது ஆய்வை நிறைவு செய்தனர்.ஒரு வாரத்தில் அறிக்கை காஞ்சீபுரம் மாவட்டத்தில் மழை-வெள்ளம் பாதித்த பகுதிகளை சுமார் 3½ மணி நேரம் மத்திய அரசின் உள்துறை இணைச் செயலாளர் டி.வி.எஸ்.என்.பிரசாத் தலைமையில் மத்திய குழுவினர் பார்வையிட்டனர். பின்னர் மத்திய குழுவின் தலைவர் டி.வி.எஸ்.என்.பிரசாத் நிருபர்களிடம் கூறியதாவது:-

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி தமிழக வெள்ள சேதங்களை பார்வையிடுவதற்காக நாங்கள் இன்று (நேற்று) சென்னை வந்துள்ளோம். நாளை (இன்று) கடலூர் மாவட்டத்தில் வெள்ளசேத பகுதிகளை பார்வையிடுகிறோம். அதுமட்டுமல்லாமல் வெள்ளம் பாதித்த பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின் கருத்துகளையும் கேட்டு வருகிறோம்.

நாளை மறுநாள் (நாளை) சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் வெள்ளசேத பகுதிகளை பார்வையிட்டு டெல்லி திரும்ப இருக்கிறோம். அங்கு சென்ற பின்னர் தமிழகத்தில் மழை-வெள்ளத்தால் ஏற்பட்ட சேதம் எவ்வளவு என்பதை மதிப்பிட்டு அறிக்கை தயாரித்து ஒருவார காலத்திற்குள் மத்திய அரசிடம் வழங்குவோம்.இவ்வாறு அவர் கூறினார்.

இன்று கடலூர்

இதன்படி, வெள்ள சேதத்தை பார்வையிட வந்த மத்திய குழுவினர் இன்று (வெள்ளிக்கிழமை) கடலூர் மாவட்டம் சென்று வெள்ள சேத பகுதிகளை பார்வையிடுகின்றனர். நாளை (சனிக்கிழமை) சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் வெள்ளம் பாதித்த பகுதிகளை பார்வையிடுகின்றனர்.

## கடலோர மாவட்டங்களில் நாளை மிக கனமழை பெய்யும்; வானிலை மையம் அறிவிப்பு



சென்னை,

இன்று (வெள்ளிக் கிழமை) குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகும் என்றும் இதன் காரணமாக நாளை மிக கனமழை பெய்யும் என்றும் வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடகிழக்கு பருவமழை

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. தமிழ்நாட்டில் சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக இந்த

மாவட்டங்களில் உள்ள ஏராளமான வீடுகளை மழை வெள்ளம் சூழ்ந்தது. இப்போது அந்த வெள்ளம் வடிந்து வருகிறது. தமிழ்நாட்டில் அக்டோபர் மாதம் 1-ந்தேதி முதல் டிசம்பர் 31-ந்தேதி வரை வடகிழக்கு பருவமழை காலம். அந்த 3 மாதம் பெய்ய வேண்டிய சராசரி மழையின் அளவை இப்போது பெய்தமழை தாண்டி விட்டது. இன்றைய வானிலை குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரிகள் கூறியதாவது:-

நாளை மிக கனமழை

தெற்கு அந்தமான் மற்றும் தென் கிழக்கு வங்கக்கடல் பகுதியில் மேலடுக்கு சுழற்சி நிலவி வருகிறது. அதன் காரணமாக குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை (நேற்று) உருவாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது உருவாகாமல் அப்படியே இருக்கிறது. குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக அடுத்த 24 மணி நேரத்திற்குள் உருவாகும். இதன் காரணமாக தமிழ்நாட்டில் இன்று (வெள்ளிக்கிழமை) சில இடங்களில் மழை பெய்யும். குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும். நாளை(சனிக்கிழமை) கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களில் மழை பெய்யும். அதாவது சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களில் மிக கனமழை பெய்யும்.

செய்யூரில் 7 செ.மீ. மழை

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் காஞ்சீபுரம் மாவட்டம் செய்யூரில் 7 செ.மீ. மழையும், விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் 5 செ.மீ. மழையும், காஞ்சீபுரம் மாவட்டம் மகாபலிபுரத்தில் 4 செ.மீ. மழையும், கேளம்பாக்கம், செங்கல்பட்டு தலா 1 செ.மீ. மழையும் பெய்துள்ளது. இவ்வாறு அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வடகிழக்கு பருவமழை எதிரொலி: ஆழியாறு அணை 117 அடியை எட்டியது இன்னும் ஓரிரு நாளில் நிரம்ப வாய்ப்பு



ஆனைமலை

வடகிழக்கு பருவமழை காரணமாக ஆழியாறு அணை 117 அடியை எட்டியது. அணை நிரம்ப இன்னும் 3 அடியே தேவைப்படுவதால் இன்னும் ஒரிரு நாளில் நிரம்பி விடும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடகிழக்கு பருவமழை

தமிழகத்தின் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. தொடர் மழையால் சென்னை, கடலூர் நகரங்களில் வெள்ளத்தில் மிதக்கின்றன. கோவை மாவட்டத்திலும் பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்தது.

தொடர் மழை காரணமாக கோவை மாவட்டத்தில் உள்ள அணைகள், குளங்கள், கிணறுகளில் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. குறிப்பாக ஆழியாறு அணை நிரம்ப இன்னும் 3 அடி தண்ணீரே தேவைப்படுகிறது.

ஆழியாறு அணை

பொள்ளாச்சியை அடுத்த மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் வால்பாறைக்கு செல்லும் வழியில் ஆழியாறு அணை அமைந்து உள்ளது. 120 அடி கொள்ளளவு கொண்ட ஆழியாறு அணை 600 ஏக்கர் பரப்பளவில் விரிந்து காணப்படுகிறது. பரம்பிக்குளம்–ஆழியாறு திட்ட தொகுப்பணைகளில் முக்கிய அணையாக திகழ்ந்து வருகிறது.

தற்போது வடகிழக்கு பருவமழை காரணமாக அணைக்கு வரும் நீர்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக அணைக்கு நீர்வரத்து

அதிகரித்தது. ஆழியாறு அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து தற்போது 117.30 அடியை எட்டி உள்ளது.

இது குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது:–

தீவிர கண்காணிப்பு

பி.ஏ.பி. திட்டத்தின் தொகுப்பு அணையாக ஆழியாறு அணை விளங்குகிறது. இதன் மொத்த நீர் இருப்பு 3.86 டி.எம்.சி. ஆகும். தற்போது அப்பர் ஆழியாறு அணையில் இருந்து 480 கனஅடி மற்றும் நீர்பிடிப்பு பகுதிகளில் இருந்து 520 கனஅடி என மொத்தம் 1000 கனஅடி நீர் வரத்தாக உள்ளது.

குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 60 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. தற்போதைய நீர் இருப்பு 3.60 டி.எம்.சி. ஆகும். இது 92 சதவீத நீர் இருப்பு ஆகும். இன்னும் அணைக்கு நீர் வரத்து அதிகரித்தால் 2–ம் கட்ட வெள்ள அபாய அறிவிப்பு வெளியிடப்படும். அணை நிரம்ப இன்னும் 3 அடியே இருப்பதால் 24 மணி நேரமும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறோம். ஒரிரு நாளில் அணை நிரம்ப வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

இதே போல் மற்ற அணைகளின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. 160 அடி கொள்ளளவான சோலையார் அணையில் 90.22 அடி நீர்மட்டமும், 72 அடி கொள்ளளவான பரம்பிக்குளம் அணையில் 54.98 அடி நீர்மட்டமும், 60 அடி கொள்ளளவான திருமூர்த்தி அணையில் 51.25 அடியும், 90 அடி கொள்ளளவான அமராவதி அணையில் 85.51 அடியும் நீர்மட்டம் உயர்ந்து உள்ளது. அணைகளின் நீர்மட்டம் உயர்ந்ததால் அதை நம்பி உள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## தாண்டிக்குடி காபி ஆராய்ச்சி நிலையம் சார்பில் முறையான பயிற்சிகளை வழங்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை




பெரும்பாறை

தாண்டிக்குடி காபி ஆராய்ச்சி நிலையம் சார்பில் முறையான பயிற்சிகளை வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வாசனைப்பயிர்கள்

கொடைக்கானல் தாலுகா தாண்டிக்குடியில் மண்டல காபி ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு இங்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்தநிலையில் மலைத்தோட்டங்களில் வாசனை பயிர்கள் சாகுபடி செய்வதற்கான தொழில்நுட்பங்கள் குறித்து கடந்த 24-ந் தேதி முதல் 3 நாட்களுக்கு கீழ்பழனி மலை விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்று கூறப்பட்டது. வாசனை மற்றும் தோட்டப்பயிர்கள் துறை, பெரியகுளம் தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோழிக்கோடு பாக்கு மற்றும் வாசனைப்பயிர்கள் மேம்பாட்டு இயக்கம் ஆகியவை சார்பில் இந்த பயிற்சி அளிக்கப்படும் என்று கூறப்பட்டது. இதன்படி கடந்த 24-ந் தேதி பயிற்சி தொடங்கியது. இதில் தாண்டிக்குடி, பண்ணைக்காடு, பூலத்தூர், மங்களம்கொம்பு, பன்றிமலை, ஆடலூர் போன்ற பகுதிகளை சேர்ந்த 350-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தகவல் தெரிவிக்கவில்லை

பின்னர் நேற்று முன்தினம் விவசாயிகள் பயிற்சிக்காக சென்ற போது தாண்டிக்குடி மண்டல காபி ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி அளிப்பதற்கான ஆட்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அவர்கள் திரும்பி சென்றனர். அதேபோல நேற்றும் அங்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவில்லை. இதுகுறித்து கீழ்பழனிமலை காபி விவசாயிகள் கூறியதாவது:-

முதல்நாள் நாங்கள் பயிற்சிக்கு சென்ற போது அனைவரிடமும் 4 பதிவேடுகளில் கையொப்பம் பெற்றுக்கொண்டனர். பின்னர் அடுத்தடுத்த நாட்களில் பயிற்சி வகுப்புகளை நடத்தாமல் விட்டுள்ளனர். இந்த பயிற்சி குறித்து காபி ஆராய்ச்சி நிலையம் தரப்பில் வத்தலக்குண்டு, பண்ணைக்காடு மற்றும் ஆடலூரில் உள்ள காபி வாரியங்களுக்கும் தகவல் தெரிவிக்கவில்லை. விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ஒருமுறையாவது காபி வாரியம் சார்பில் முறையான பயிற்சிகளை வழங்க வேண்டும். ஆனால் அது நடப்பதில்லை. அத்துடன் தடியன்குடிசை தோட்டக்கலை நிலையத்தால் விவசாயிகளுக்கு எந்த பலனும் இல்லை. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## தேங்காய் விளைச்சல் அதிகமானதால் விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை



வேதாரண்யம் பகுதியில் தேங்காய் விளைச்சல் அதிகமானதால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தேங்காய் விலை வீழ்ச்சி

வேதாரண்யம் தாலுகா தாணிக்கோட்டகம், வெள்ளிக்கிடங்கு, வண்டுவாஞ்சேரி, துளசியாப்பட்டினம், அண்ணாப்பேட்டை, புஷ்பவனம் உள்ளிட்ட 25-க்கும் மேற்பட்ட கிராமங்களில் 5 ஆயிரம் ஏக்கரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் விளையும் பெரிய தேங்காய்கள் நார் வைத்து உரிக்கப்பட்டு குஜராத்திற்கும், அதில் சின்ன தேங்காய்களை கர்நாடகத்திற்கும், நார் இல்லாமல் சுத்தமாக உரிக்கப்படும் தேங்காய்கள் மும்பை, டெல்லி, கொல்கத்தாவிற்கும் அனுப்பப்படுகிறது. மேலும், கொப்பரை

தேங்காய்கள் காங்கேயம், வெள்ளங்கோயில், உடுமலைப்பேட்டைக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இங்கு விளையும் அனைத்து தேங்காய்களையும் வியாபாரிகளே நிர்ணயிக்கும் விலைக்குதான் விவசாயிகள் கொடுக்க வேண்டிய நிலை உள்ளது.

இந்நிலையில் இந்த ஆண்டு விளைச்சல் அதிகமானதால் தற்போது தேங்காய் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 3 மாதத்திற்கு முன்பு ரூ.10-க்கு கொள்முதல் செய்யப்பட்ட தேங்காய் தற்போது ரூ.7-க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கொள்முதல் நிலையம்

அதற்கு காரணம் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு வேதாரண்யம் தாலுகா தேத்தாகுடியில் அரசு கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையம் திறந்திருந்தது. இதனால் விவசாயிகள் அங்கு தேங்காய்களை கொப்பரையாக்கி நல்ல விலைக்கு விற்று வந்தனர். தற்போது அந்த கொள்முதல் நிலையம் மூடப்பட்டு விட்டதாலும் அதிக விளைச்சளாலும் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனவே அரசு மீண்டும் இப்பகுதியில் கொப்பரை கொள்முதல் நிலையம் திறந்தால் தென்னை விவசாயிகள் மிகுந்த பயன்பெறுவர். மேலும் தென்னை மரங்களில் தஞ்சை வாடல் நோயும், சிவப்பு வண்டு தாக்குதல், வேர்க்கரையான் போன்ற நோய் தாக்குதல் அதிகமாக காணப்படுகிறது. இதனை தடுக்க வேளாண்மைத்துறையினர் தகுந்த ஆலோசனை வழங்க வேண்டுமென தென்னை விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## நிலவேம்பு கசாயம் அருந்துவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பு தொடர்மழை-காய்ச்சல் பாதிப்பு எதிரொலி

பரமத்தி வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் பெய்த தொடர் மழையால் பொதுமக்களிடையே காய்ச்சல் பாதிப்பு அச்சம் ஏற்பட்டுள்ளதால், அரசு மருத்துவமனை சித்த மருத்துவ பிரிவில் நிலவேம்பு கசாயம் அருந்துவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.



எண்ணிக்கை அதிகரிப்பு

பரமத்தி வேலூர் சுற்று வட்டார பகுதிகளான பொய்யேரி, இடையாறு, பொத்தனூர், பாண்டமங்கலம், நல்லியம்பாளையம், வெட்டுக்காட்டுபுதூர் உள்ளிட்ட பகுதியில் இருந்து அதிக அளவில் பொதுமக்கள் பரமத்தி வேலூர் அரசு மருத்துவமனைக்கு தினசரி சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். தற்போது தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருவதால், ஆங்காங்கே வைரஸ் காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வருகிறது. இதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையில் டெங்கு உள்பட சில வைரஸ் காய்ச்சலை கட்டுப்படுத்த சித்த மருத்துவ பிரிவில் வழங்கப்படும் நிலவேம்பு கசாயம் சிறந்த மருந்தாகும். நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், கிராம ஊராட்சி பகுதி மற்றும் அரசு அலுவலகங்களில் இலவசமாக நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டு வருகிறது. பரமத்தி வேலூர் அரசு மருத்துவமனையில் தினசரி நிலவேம்பு கசாயம் அருந்த 100-க்கும் மேற்பட்டோர் வந்து செல்வார்கள். தற்போது நிலவேம்பு கசாயம் அருந்த 300-க்கும் மேற்பட்டோர் வந்து செல்கின்றனர்.

நிலவேம்பு கசாயம்

இதுகுறித்து சித்த மருத்துவர் காந்தி கூறியபோது, உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவதால் கொசு கடித்தவுடன் டெங்கு, வைரஸ் காய்ச்சல் பரவுகிறது. சாதாரணமாக ஒருவரின் உடலில் 1.50 லட்சம் தட்டணுக்கள் இருக்கும். டெங்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டால் படிப்படியாக உடலில் உள்ள தட்டணுக்கள் அழிந்து, எண்ணிக்கை குறைந்து ரத்தப்போக்கு ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தை உருவாக்கும். பாரம்பரிய கிருமி நாசினியான நிலவேம்பு கசாயம் அருந்துவதால் உடலில் உள்ள நோய் கிருமி அழிக்கப்பட்டு தட்டணுக்கள் பாதுகாக்கப்படும். நிலவேம்பு கசாயம் அருந்துவதால் 3 மணி நேரத்தில் தட்டணுக்கள் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து காய்ச்சலில் இருந்து விடுபடலாம். காய்ச்சல் அச்சத்தால் கடந்த சில நாள்களாக அரசு மருத்துவமனைகளில் வைக்கப்படும் நிலவேம்பு கசாயம் சில மணி நேரங்களிலேயே தீர்ந்து விடுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## 400 மூட்டை பருத்தி ரூ.6 லட்சத்துக்கு ஏலம்



நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம்

நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது. இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 400 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர்.

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.6 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 809 முதல் ரூ.4 ஆயிரத்து 205 வரை ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

## கொலக்கம்பை பகுதியில் நிலங்களில் தேங்கி நிற்கும் மழைநீரால் காய்கறிகள் அழுகும் அபாயம் விவசாயிகள் கவலை



கொலக்கம்பை

கொலக்கம்பை பகுதியில் விவசாய நிலங்களில் தேங்கி நிற்கும் மழைநீரால் காய்கறிகள் அழுகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>பலத்த மழை</u>

கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில வாரங்களாக பலத்த மழை பெய்து வந்தது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் சாலையோரம் பல இடங்களில் மண்சரிவும், மரங்களும் விழுந்து போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. இதனை நெடுஞ்சாலைத்துறையினர், தீயணைப்பு துறையினர் அகற்றி வருகிறார்கள்.

மேலும் மழையின் காரணமாக நீரோடைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் இருந்த விவசாய நிலங்களுக்குள் தண்ணீர் புகுந்தது. இதனால் விவசாய பயிர்கள் அழுகும் அபாய நிலை ஏற்பட்டது. இது விவசாயிகளை கவலை அடைய செய்தது.

<u>வடியாமல் தேங்கி நிற்கிறது</u>

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:–

கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் பெய்த பலத்த மழையின் காரணமாக விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கியது. கடந்த 2 நாட்களாக மழை இல்லாமல் வெயில் அடித்து வருகிறது. ஆனாலும் டெரேமியா, சட்டன், கேத்திபாலாடா, கரும்பாலம், கிளிஞ்சாடா உள்ளிட்ட பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் மழைநீர் மற்றும் நீரோடைகளில் இருந்து வந்த தண்ணீர் வடியாமல் தேங்கி நிற்கிறது.

இதன் காரணமாக காய்கறி பயிர்கள் அழுக தொடங்கி உள்ளன. குறிப்பாக முட்டைகோஸ், கேரட், மேரக்காய் போன்றவை அழுகி உள்ளதால் நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளது. எனவே விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் உழவு எந்திரங்கள் வேளாண்மை இணை இயக்குநர் வழங்கினார்



புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் உழவு எந்திரங்களை வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன் வழங்கினார்.

மானிய விலையில் உழவு எந்திரங்கள்

புதுக்கோட்டையில் நடந்த நிகழ்ச்சியில் தேசிய வேளாண் வளர்ச்¢சி திட்டத்தில் மானிய விலையில் உழவு எந்திரங் களை(பவர்டில்லர்) அன்னவாசலை சேர்ந்த விவசாயி செல்வராஜ், அறந்தாங்கியை சேர்ந்த நித்யா ஆகியோருக்கு வேளாண்மை இணை இயக்குநர் சந்திரசேகரன் வழங்கினார். அப்போது வேளாண்மை துணை இயக்குநர்(மத்திய திட்டம்) கந்தசாமி மற்றும் வேளாண்மை அதிகாரிகள் உடன் இருந்தனர்இது தொடர்பாக வேளாண்மை இணை இயக்குநர் சந்திரசேகரன் வெளியிட்டு உள்ள ஒரு செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தற்போது நிலவி வரும் வேளாண் தொழிலாளர் பற்றாக்குறையினை போக்கிட வேளாண்மையில் எந்திர மயமாக்கல் மிகவும் அவசியமானது. இதனை கருத்தில் கொண்டு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் நடப்பாண்டு மானிய விலையில் உழவு எந்திரங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் விநியோகம் செய்யப்படுகிறது. சிறு, குறு, மகளிர் மற்றும்

ஆதிதிராவிட விவசாயிகளுக்கு எந்திரத்தின் அடிப்படை விலையில் 50 சதவீதம் அல்லது ரூ.75 ஆயிரம். இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. இதர விவசாயிகளுக்கு எந்திரத்தின் அடிப்படை விலையில் 40 சதவீதம் அல்லது ரூ.60 ஆயிரம். இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

பதிவு செய்ய வேண்டும

உழவு எந்திரங்கள் பெறுவதற்கு தேவையான தகுதியான விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தினை தொடர்பு கொண்டு விண்ணப்பித்து முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டும். விவசாயிகள் தங்களுக்கு தேவையான வேளாண் பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் விலைப்புள்ளியினை பெற்று மானிய தொகையினை கழித்து விவசாயிகள் பங்குத் தொகைக்கான கேட்பு வரைவோலையினை விலைப்புள்ளியுடன் வழங்க வேண்டும்.

எனவே புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தினை உடனடியாக தொடர்பு கொண்டு உழவு எந்திரங்களை மானியத்தில் பெற்று பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கு பயிற்சி



குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தில், உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கான பயிற்சி முகாம் நடந்தது. இதில் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் சாந்தி கலந்து கொண்டு பயிற்சியை தொடங்கி வைத்து பேசினார். பயிற்சியின்போது குடுமியான்மலை வேளாண்மை பல்கலைக்கழக உழவியல் பிரிவு பேராசிரியர் குருசாமி, நெற்பயிரில் நீர் மேலாண்மை குறித்து விளக்கி கூறினார். வேளாண் அலுவலர் செல்வி, நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகள், அவற்றின் பொருளாதார சேதநிலை, அவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கி கூறினார். பயிற்சியில் உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கு உழவர் நண்பன் தொழில்நுட்பக் கையேடுகள் வழங்கப்பட்டன. முடிவில் உழவர் மன்ற அமைப்பாளர் கூவாட்டுப்பட்டி முருகேசன் நன்றி கூறினார்.

## விவசாயிகள் ஆலோசனை கூட்டம்



வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் ஒன்றிய அளவிலான விவசாயிகள் ஆலோசனை கூட்டம் அரிமளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு ஆத்மா குழு தலைவர் சண்முகம் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் உதயகுமார் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் ஒன்றியத்தில் சாகுபடி செய்துள்ள நெல், பயறு வகைகள், சிறுதானியங்கள் தொடர்பான தொழில்நுட்ப கருத்துகள் குறித்து விவாதிக்கப்பட்டது. பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விவசாயிகள், ஆலோசனை குழு உறுப்பினர்களின் கருத்துகள் கேட்டறியப்பட்டன. மேலும் ஆத்மா திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பண்ணைப்பள்ளி, விதை கிராம திட்ட பயிற்சி, உழவர் நண்பர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் உள்பட பல்வேறு தீர்மானங்கள்

நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண் வணிகத்துறை உள்பட பல்வேறு துறைகளை சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் முகம்மது ஷாஜகான், உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் விக்னேஷ் ஆகியோர் செய்திருந்தனர்.

## ரூ.7.85 லட்சம் மதிப்பிலான விதைகள் விற்பனைக்கு தடை சிறப்பு ஆய்வு குழுவினர் நடவடிக்கை




ஆத்தூர், தலைவாசல் வட்டாரங்களில் ரூ.7.85 லட்சம் மதிப்பிலான விதைகள் விற்பனைக்கு தடை விதித்து சிறப்பு ஆய்வு குழுவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சிறப்பு ஆய்வு குழு

சேலம், நாமக்கல் மாவட்டங்களில் விதைகள் விற்பனை செய்வதற்கான உரிமம் பெற்று விவசாயிகளுக்கு விதைகள் விற்பனை செய்து வரும் தனியார் நிலையங்களில் சேலம் விதை ஆய்வு துணை இயக்குனர் சவுந்தரராஜன் தலைமையிலான சிறப்பு ஆய்வு குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது சரியான முறையில் இருப்பு பதிவேடு பராமரிக்காதது, உண்மை இருப்புக்கும், புத்தக இருப்புக்கும் வேறுபாடு கண்டறியப்பட்டது. சரியான கொள்முதல் ஆவணம் இல்லாதது, விபர அட்டையில் முழுமையான

விவரங்கள் குறிப்பிட படாதது போன்ற பல்வேறு விதமான விதைச்சட்ட விதி மீறல்கள் கண்டறியப்பட்டன.

விற்பனைக்கு தடை

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், தலைவாசல் வட்டாரங்களில் உள்ள தனியார் விதை விற்பனை நிலையங்களில் ரூ.7 லட்சத்து 85 ஆயிரம் மதிப்பிலான 3667 கிலோ அளவுக்கு நெல், வீரிய மக்காச்சோளம், வீரிய பருத்தி மற்றும் காய்கறி விதைகள் அடங்கிய 38 விதைக்குவியல்கள் முடக்கம் செய்யப்பட்டு விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டது. மேலும் காலாவதியான விதைகளை இருப்பு வைக்கவோ, விற்பனை செய்யவோ கூடாது என்றும், அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட ஆய்வகங்களில் பரிசோதனை செய்யப்பட்டு தரமானவை என ஆய்வு அறிக்கை பெறப்பட்ட உண்மைநிலை நெல் விதிகளை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் எனவும் விதைச்சட்ட விதிமீறல் செய்யும் விதை விற்பனையாளர்கள் மீது விதைச்சட்டம் மற்றும் விதை கட்டுப்பாட்டு ஆணை ஆகியவற்றின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் துணை இயக்குனர் சவுந்தரராஜன் எச்சரிக்கை விடுத்தார்.

## கார்த்திகை தீப திருநாளையொட்டி மாவட்ட உழவர் சந்தைகளில் காய்கறிகள் ரூ.69 லட்சத்துக்கு விற்பனை



கார்த்திகை தீப திருநாளையொட்டி நேற்று மாவட்ட உழவர் சந்தைகளில் காய்கறிகள் ரூ.69 லட்சத்து 6 ஆயிரத்து 352-க்கு விற்பனை செய்யப்பட்டது.

கார்த்திகை தீப திருநாள்

சேலம் மாவட்டத்தில் மேட்டூர், ஆத்தூர், ஆட்டையாம்பட்டி, இளம்பிள்ளை, தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், இடைப்பாடி ஆகிய 7 இடங்கள், மாநகரில் அஸ்தம்பட்டி, சூரமங்கலம், தாதகாப்பட்டி, அம்மாப்பேட்டை ஆகிய 4

இடங்கள் என மொத்தம் 11 இடங்களில் உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகிறது. இந்தநிலையில், கார்த்திகை தீப திருநாளையொட்டி நேற்று உழவர் சந்தைகளுக்கு வழக்கத்தை விட நுகர்வோர்களின் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. இதையொட்டி, விவசாயிகளும் அதிகளவு காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். சேலம் சூரமங்கலம் உழவர் சந்தைக்கு நேற்று 265 விவசாயிகள் 46 டன் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில் ரூ.16 லட்சத்து 24 ஆயிரத்து 180-க்கு காய்கறிகள் விற்பனையானது.

உழவர் சந்தைகள்

நுகர்வோர் மட்டும் 9 ஆயிரத்து 192 பேர் உழவர் சந்தைக்கு வந்து காய்கறிகளை வாங்கி சென்றனர். தாதகாப்பட்டி உழவர் சந்தைக்கு 197 விவசாயிகள் 29 டன் காய்கறிகள் கொண்டு வந்தனர். இதன் மூலம் ரூ.9 லட்சத்து 61 ஆயிரத்து 595-க்கு விற்பனையானது. 5 ஆயிரத்து 767 நுகர்வோர் வந்தனர். அம்மாப்பேட்டை உழவர் சந்தைக்கு 78 விவசாயிகள் 16 டன் காய்கறிகள் கொண்டு வந்தனர்.

இதில் ரூ.5 லட்சத்து 4 ஆயிரத்து 955-க்கு விற்கப்பட்டது. 3 ஆயிரத்து 926 பேர் வந்து பொருட்களை வாங்கி சென்றனர். அஸ்தம்பட்டி உழவர் சந்தைக்கு 68 விவசாயிகள் 13 டன் காய்கறிகள் கொண்டு வந்தனர். இதன்மூலம் ரூ.5 லட்சத்து 63 ஆயிரத்து 640-க்கு விற்கப்பட்டது. 2 ஆயிரத்து 608 நுகர்வோர் வந்திருந்தனர்.

ரூ.69 லட்சத்துக்கு விற்பனை

இதுகுறித்து வேளாண்மை துணை இயக்குனர்(வேளாண் வணிகம்) சுகுமார் கூறும் போது, 'சேலம் மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளுக்கு நேற்று கார்த்திகை தீப திருநாளையொட்டி நுகர்வோர்களின் வரத்து அதிகமாக இருந்தது. மாவட்டத்தில் உள்ள 11 உழவர் சந்தைகளில் மொத்தம் 1,077 விவசாயிகள் 196 டன் காய்கறிகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதன் மூலம் ரூ.69 லட்சத்து 6 ஆயிரத்து 352-க்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டது. நுகர்வோர் மட்டும் 42 ஆயிரத்து 203 பேர் வந்து காய்கறிகளை வாங்கி சென்றனர்' என்றார். நேற்று உழவர்கள் சந்தைகளில் கத்தரிக்காய்

கிலோ ரூ.50 முதல் ரூ.60 வரையும், தக்காளி கிலோ ரூ.42-க்கும், பீன்ஸ் கிலோ ரூ.76-க்கும், கேரட் கிலோ ரூ.42-க்கும், வெண்டைக்காய் கிலோ ரூ.44-க்கும், அவரைக்காய் கிலோ ரூ.55-க்கும், சின்ன வெங்காயம் கிலோ ரூ.50-க்கும், பெரிய வெங்காயம் கிலோ ரூ.44-க்கும் விற்பனை செய்யப்பட்டது.